விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 16 ஞாயிற்றுக்கிழமை (30.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 162

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## மலகூடக் குழியில் சடலங்கள் கணேசபுரத்தில் பரபரப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கணேசபுரத்தில் மலகூடக் குழியிலிருந்து அழுகிய நிலையில் மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி கணேசபுரத்தில் நேற்று மலகூடக்குழியொன்றைத் துப்புரவு செய்யும் போது அதற்குள் இருந்து கறுத்த பொலித்தீன் பையினால் மூடிக் கட்டப்பட்ட நிலையில் மூன்று சடலங்கள் அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அப் பகுதியைச் சேர்ந்த கிராமசேவையாளரால் கிளிநொச்சிப் பொலிஸாருக்குத் தகவல் (20 ஆம் பக்கம் பார்க்க)

## நாம் ஏற்கும் தீர்வை முன் வைத்தால் அரசைக் கூட்டமைப்பு ஆதரிக்கும்

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை வழங்க அரசாங்கம் தயார் எனில், நாடாளுமன்றத்தில் அதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கான ஆதரவை வழங்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே நடைபெற்று வரும் இரகசியப் பேச்சுவார்த்தை தொடர்பாகக் கருத்துக் கேட்ட போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் மனிதா (20 ஆம் பக்கம் பார்க்க)



# இலங்கையில் போர்க் குற்றங்கள்

# ஐ.நா. நிபுணர் குழு தயாராகிறது!

## தண்டனை கொடுப்போம் என பான் கீ மூன் கர்ச்சிப்பு

(நியூயோர்க்)

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் உருவாக்கப்படும் நிபுணர்கள் குழுவுக்கான பிரதிநிதிகள் தெரிவு நடைபெற்று வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.மக்களின் கருத்தறிந்த பின்பே யாழுக்கு இரணைமடு நீர் விநியோகம்

### நேற்றைய கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கான நீர் விநியோகம் முழுமையாக மேற்கொள்ளப்பட்ட பின்பே யாழ்.மாவட்டத்திற்கு இரணைமடுக்குளத்திலிருந்து நீர்பெறும் திட்டம் அமுல் செய்யப்படும் என்று கொள்கையளவில் நேற்றைய கூட்டத்தில் முடிபெடுக்கப்பட்டது.

இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்.மாவட்டத்திற்குக் குடிநீர் விநியோகத் திட்டம்மேற்கொள்வதற்கான கருத்துப் பரிமாறல் கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நடைபெற்றது.

இதில் நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், தமிழ்த் தேசியக் கூட்ட (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. தலைமைப் பதவி இருவர் கடும் போட்டி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை கைப்பற்றும் நோக்கில் சஜித் பிரேமதாச மற்றும் ரவி கருணாநாயக்கவுக்கிடையில் கடும் போட்டி ஆரம்பமாகியுள்ளது.

எதிர்காலத் தலைமைப் பதவிக்காகக் குறித்த இருவருமே போட்டியிடவுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் இடைநிலை உறுப்பினர்கள் அதிகளவில் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதாகவும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்கு ஆதர (20 ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்த புலிகளைக் கொல்ல மாட்டோம் விஜய் நம்பியாரிடம் நான் இவ்வாறு கூறவில்லை

### பாலித ஹோகன்ன இன்னர் சிற்றிப் பிரஸுக்குத் தெரிவிப்பு

(கொழும்பு)

இறுதிக் கட்டப் போரின்போது சரணடைந்த விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட மாட்டார்கள் என்று தான் எந்த உறுதி மொழியையும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் ஆலோசகர் விஜய் நம்பியாருக்கு வழங்கவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகன்ன தெரிவித்துள்ளார்.

சரணடையும் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் போர்க் கைதிகளாக நடத்தப்படுவார்கள் என்று தனக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய மற்றும் பாலித ஹோகன்ன ஆகியோர் உறுதிமொழியளித்ததாக விஜய் நம்பியார் அல் ஜசீரா தொலைக்காட்சிக்குத் தெரிவித்தமை குறித்துப் பாலித ஹோகன்னவிடம் இன்னர் சிற்றிப் பிரஸ் செய்தி நிறுவனம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விவகாரத்தில் தனது கருத்தைத் தெரிவித்து (20 ஆம் பக்கம் பார்க்க)

DHL WORLDWIDE EXPRESS

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

யாழ் குடாநாட்டிலிருந்து உலக நாடுகளுக்கு DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள!

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

குறிப்பிட்ட சில நாட்களுக்கு விசேட விலைக்கழிவு

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

ஞாயிறு விருமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ்,வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)

46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)

பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)

குடாநாட்டில் முகவர்கள் தேவை

TCN EXPRESS

2B, Nelsan Place, Colombo -06

(சி--342)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஊடகவியலாளர் தேவா-வரதன் மறைவின் ஈராண்டு நினைவில்


தேவகுமார்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ' ஔவைப் பாட்டியின் இக் கூற்று நூறு வீதம் உண்மை. அப்படியானால் இறந்தவர்களை மறந்து விடுவதா? குடும்ப மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் இறந்தவர்கள் நினைவு கூரப்படுதல் உலகில் எல்லா இன மக்களாலும் மேற் கொள்ளப்படுகின்றன.

குடும்ப மட்டத்தில் நினைவூட்டல், சமய அனுட்டானங்களுடன் குடும்ப உறுப்பினர்களின் ஒன்று கூடலுடன் நடைபெறும்.

பிரதேச மட்டத்தில் நடைபெறும் நினைவூட்டல் பிரதேச மக்கள் ஒன்று கூடி சமய, சமூக நிகழ்ச்சிகளுடன் நடைபெறும். தேசிய மட்டத்தில் நடைபெறும் நினைவூட்டல் தேசத்தின் பல பாகங்களிலும் பெரும்பாலான மக்கள் பங்குபற்றி சிறப்பிக்கப்படும். இவ்வாறு நினைவு கூரப்படுபவர்கள் பின்வரும் லட்சணத் தைக் கொண்டவர்களாக இருப்பதைஅவதானிக்கலாம்.

அர்ப்பணிப்புடன் குடும்ப மேம்பாட்டிற்கு உழைத்தவர். அர்ப்பணிப்புடன் தான் சார்ந்த சமூக மேம்பாட்டுக்கு உழைத்தவர். அர்ப்பணிப்புடன் இன,மத பேதங்களுக்கு அப்பால் நின்று நாட்டுக்கும் மனித சமூகமேம் பாட்டிற்கும் உழைத்தவர். இந்தப் பின்னணியில் நாம் நினைவு கூரும் பரரூபசிங்கம் தேவகுமார், மகேந்திரன் வரதன் ஆகியோரை பொருத்திப் பார்த் தல் வேண்டும்.

**தேவகுமார்**

பரரூபசிங்கம் தேவகுமார் தான் வாழ்ந்த பிரதேசத்தில் தன்னை ஸ்தாபன ரீதியாக இணைத்துக் கொண்டு செயற்பட்டவர். வட்டு-இளைஞர் உடலுள விருத்திச் சங்கம், வட்டு-மூளாய் றோட் ஐக்கிய நாணயச் சங்கம், வட்டு-தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், வட்டு-கண்ணகை அம்மன் கோயில் தொண்டர் சபை, அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயில் தொண்டர் சபை என்பவற்றில் இவர் அங்கம் வகித்துச் செயற்பட்டவர்.

இவை எல்லாவற்றிலும் நிர்வாக மட்டத்தில் பங்குபற்றித் துடிப்புடன் செயற்பட்டவர். இவரின் தாய் மொழியாற்றலும் பேச்சுத் திறனும், பல முக்கியஸ்தர்களின் கவனத்தை ஈர்த்தது என்றால் மிகையாகாது.

நவீன முகாமைத்துவம் எதிர்பார்க்கும் எல்லா அம்சங்களும் உள்ள இளைஞனாக அவரின் நோக்கும், போக்கும் அமைந்திருந் தன.

அவரின் துணிச்சல் மிக்க அணுகுமுறை அவரை நாடி ஊடகத்துறை நகர உதவியது. சக்தி தொலைக்காட்சி நிறுவனம் அவரைத் தன் சேவையில் இணைத்தது. இந்தப் புதிய சூழலில் செயற்பட்ட தேவகுமார் பல நண் பர்களையும்சிலஎதிரிகளையும்சம்பாதிக்கநேர்ந்தது.

அரச மட்டத்திலும் பொதுத்துறையிலும் தொடர்பு ஏற்படுத்துதல் தவிர்க்க முடியாதாகியது. தான் பொறுப்பெடுத்த கடமையை- ஊடக தர்மத்தை பேணிக்கொண்டு துடிப்புடன் செயற்பட்டார். அஞ்சுவது அஞ்சாமை பேதமை... என் னும் வள்ளுவனின் கூற்றை இளம் உள்ளம் உதாசீனம் செய்தது.

நலன் விரும்பிகளாகக் காட்டிய சிலர் தன்னை தம் சுயதேவைக்காகப் பாவித்தனர் என்பதை காலம் தாழ்ந்து உணர்ந்து கொண்டார். இவை எல்லாவற்றின் ஒட்டுமொத்த விளைவாக அவர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். தேவகுமார் மட்டுமல்ல அவருடன் பயணித்த வரதனும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்.

**வரதன்...**

வரதன் சமய நம்பிக்கை உடையவர். அவர் எல்லோருக்கும் பிரதி உபகாரம் கருதாது உதவுபவர். அவரை எல்லோரும் எங்கள் வீட்டின் பிள்ளை என பரிவுடன் அழைப்பர். எவருக்கும் உடுக்கை இழந்தவன் கைபோல் உதவும் பண்பாளன். அரசியலில் எள்ளளவும் ஈடுபாடு இல்லாதவர்.

இவ்விரு இளஞ்சிங்கங்களை மூளாய் றோட் சமூகம் இழந்தது. இவர்கள் பட்டை தீட்டப்படவேண்டிய வைரங்கள். இவ் விருவரின் கொலைகளும் தனிப்பட்ட விரோதத்தால் நிகழ்ந் தவை அல்ல. எம்மை விட்டு கொடூரக் கொலை மூலம் பிரிக்கப்பட்ட இவ் இளைஞர்களை நினைவு படுத்தல் அர்த்தபுஷ்டியாக இருக்க வேண்டும்.

சி.இராமச்சந்திரா

## நேர்த்திக்கடனுக்குச் சென்றவரை திருடர்கள் தீர்த்துக் கட்டினர்

(யாழ்ப்பாணம்)

நேர்த்திக் கடன் செலுத்த ஆலயத்திற்குச் சென்றவரை 10 ஆயிரம் ரூபாய் பணத்திற்காக அடித்துக் கொலை செய்துள்ள சம்பவம் புங்குடுதீவில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி உதயநகரைச் சேர்ந்த சோமசுந்தரம் சுப்பிரமணியம் வயது (56) என்பவரே இச்சம்பவத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது பற்றி தெரியவருவதாவது,

பிரஸ்தாப நபர் புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தில் உள்ள கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு வருடா வருடம் கிளிநொச்சியிலிருந்து வந்து நேர்த்திக் கடன் செலுத்திச் செல்பவர்.

வன்னி யுத்தம் இடம் பெற்ற வேளை இடம் பெயர்ந்து முகாமில் இருந்து மீள்குடியேற்றப்பட்ட பின்னர், நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக நேற்றுமுன்தினம் புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயத்திற்குத் தனது மனைவியுடன் வந்துள்ளார்.

ஆலயத்தில் நேர்த்திக்கடனை முடித்து விட்டு சென்றவேளை அப்பகுதியில் வந்த இருவர் தாம் சாராயம் வாங்கித் தருவதாகவும் 250 ரூபாய் பணம் தரும்படியும் கேட்டுள்ளனர்.

தனது பணப்பையிலிருந்து 250 ரூபாய் பணத்தை எடுத்துக்கொடுத்த வேளை, அதிக பணம் இருப்பதைக் கண்ட அவர்கள் சாராயம் தூர இடத்தில் விற்பதாகவும் அவரையும் வரும்படி அழைத்துச் சென்றுள்ளனர்.

இவர்களின் கதையை நம்பி அவர் ஆலயத்திற்கு அருகில் மனைவியை இருக்கும்படி கூறிவிட்டு சென்றுள்ளார்.

இந் நிலையில் பலமணி நேரமாகியும் கணவரைக்காணவில்லை என அஞ்சிய அவரது மனைவி அயலில் நின்றவர்களுக்கு சம்பவம் பற்றி தெரியப்படுத்த, அவர்கள் அப்பகுதியில் தேடியபோது புங்குடுதீவு பிள்ளையார் கோவில் பற்றைக்குள் அவர் சடலமாக கிடப்பதைக் கண்டனர்.

இதேசமயம் இறந்தவரை அழைத்துச் சென்றவரில் ஒருவர் அங்குவந்தபோது மனைவி அவரை இனங்காட்ட பொதுமக்கள் அவரை மடக் கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளனர். இதேவேளை மற்றொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சம்பவம் பற்றி விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ந-7)

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று 30ஆம் திகதி காலை 9 மணிக்கு அதிபர் ந.நாகராஜா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இதில் புதிய அங்கத்தவர்கள் தெரிவும் பாடசாலையின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ந)

## கவுணாவத்தை வேள்வியில் கடாக்கள் பலியிடப்பட்டன

### ஒரு கடாவின் விலை ரூபாய் ஒரு இலட்சம்

(கீரிமலை)

கீரிமலை கவுணாவத்தை ஆலயத்தில் நேற்று இடம் பெற்ற வருடாந்த பொங்கல் நிகழ்விலும் மற்றும் வேள்வியிலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். அதிகாலை முதல் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வேள்வி நடைபெற்ற இடத்தில் மக்கள் கூடினார்கள்.

ஆலயம் உயர்பாதுகாப்பு வலயத்தில் இருப்பதனால் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக கவுணாவத்தை வைரவர் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் மக்கள் சென்று தமது நேர்த்திக்கடனை நிறைவேற்ற அனுமதிக்காத நிலைமை தொடர்ந்து காணப்படுகின்றது.

இந்த ஆண்டும் ஆலயத்தில் ஆலய பிரதம குரு உட்பட மட்டுப்படுத்திய மக்கள் சென்று ஆலயத்தில் பொங்கல் நிறைவேற்றவும் மற்றும் ஒரு கடாய், ஒரு கோழி வெட்டவும் அனுமதிக்கப்பட்டது.

ஏனைய பல நூற்றுக்கணக்கான கடாய்கள் மற்றும் கோழிகள் ஆலயம் அமைந்துள்ள இடத்திலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தனியார் காணி ஒன்றில் வெட்டப்பட்டன. அதிகாலையில் கடாக்கள் மிகவும் கோலாகலமாக உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு மாலைகள் அணிவிக்கப்பட்டு அதிகாலை 3.30 மணி முதல் கடா வெட்டப்படும் இடத்திற்கு கொண்டுவரப்பட்டன. நேற்று முதலாவது கடா சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியில் விலைப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ந-5)

## விஞ்ஞானபீடம் நடத்திய போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கிகள் அனுசரணையுடன் விவசாய பீட மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிருபாகர் ஜெயக்குமார் ஞாபகார்த்த விஞ்ஞான பொது அறிவு வினாவிடைப் போட்டியின் 2ஆம் கட்ட வாய்மூல வினாடி வினாப்போட்டி நேற்று சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக விவசாய பீட பிரதான மண்டபத்தில் விவசாய உயிரியல் துறை விரிவுரையாளர் கலாநிதி ஜி.திருக்குமரன் தலைமையில் நடைபெற்றது.

இப் போட்டியில் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறிய பாடசாலைகளான யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யா/வடமராட்சி இந்துக்கல்லூரி அணிகளில்; யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி அணி முதலாமிடத்தினையும் யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 2ஆம் இடத்தினையும், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி 3ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

இப் போட்டியில் முதற்கட்டமாக நடந்த எழுத்துப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் முதல் 10 இடங்களை பெற்றுக்கொண்ட வெற்றியாளர்கள்;

ச.சபேசன்- யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி-1ஆம் இடம், சு.தாரணி-யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை-2ஆம் இடம், வா.நிசாந்திகா-யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை-3ஆம் இடம், உ.கார்த்திகேயன்-யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி-3ஆம் இடம்,

ஜே.ஜோய்மாதவன்-யா/புனித பத்திரிசியார் கல்லூரி-5ஆம் இடம், ஏ.சஞ்சயன்-யா/சென் ஜோன்ஸ் கல்லூரி-5ஆம் இடம், அ.அன்ருவசந்தன்-யா/சென் ஜோன்ஸ் கல்லூரி-5ஆம் இடம், பி.கீர்த்தனன்-யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி-8ஆம் இடம், ஆருத்திரன்-யா/சென் ஜோன்ஸ் கல்லூரி-9ஆம் இடம், சி.பகீரதி-யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை-10ஆம் இடம், மு.சண்முகன்-யா/உடுபிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி-10ஆம் இடம், உ.பிரணவதர்சன்-யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்-10ஆம் இடம்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்குரிய பரிசளிப்பு வைபவம் பின்னர் அறிவிக்கப்படும். (ந)

## தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் உயிரிழந்தால் பொலிஸாரே பொறுப்பு

(கொழும்பு)

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸ் நிலையத்தில் ஒருவர் உயிரிழந்ததால்அதுகுறித்த பொறுப்பை பொலிஸாரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொட்டாவ காவல் நிலையத்தில் சந்தேக நபர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் அதிகாரியொருவரே இவ்வாறு கூறியுள்ளார்.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக கொட்டாவ பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 2 காவல்துறையினர் விசாரணை முடியும் வரை பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் கைது செய்யப்பட்ட கைதி ஒருவர் விசாரணை முடிபடைந்த பின்னர் கொட்டாவ காவல் நிலையத்தில் உயிரிழந் திருந்தார். சந்தேக நபர் உயிரிழக்கும் வரை அது குறித்து அறிய எவ்வித நடவடிக்கையும் எடுக்காத சூழ்நிலையில் இந்த இடைக்கால பணி நீக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ந-5)


**தவறிவிட்டது**

வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மகேந்திரராஜன் பிரியநங்கை ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 918442960V) யும் வட இலங்கை சங்கீத சபை நடத்தும் தரம் II, III பரீட்சைக்கான அனுமதிப் பத்திரமும் கடந்த 27 ஆம் திகதி இரவு துரையப்பா விளையாட்டரங்கில் தவறிவிட்டது. நான் இந்த வருடம் A/L பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவி என்பதால் என் நிலையைக் கருத்திற் கொண்டு கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் அல்லது யா/வட்டு இந்து நவோதயாக் கல்லூரி அதிபரிடமோ சிந்துபுரம் உப தபால் கந்தோரிலோ தயவு செய்து ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொலைபேசி இல. 077 9914751
காயத்திரி கோட்டம், வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.
(1596)

**சேவை முகவர்**
**விற்பனைக்கு**

கந்தர்மடம், கோண்டாவில், உரும்பிராய் பலாலி வீதி 150 மீற்றர் தூரம் 9 பரப்பு, பொற்பதி வீதி, பலாலி வீதி 6ஆம் லேன், நல்லூரடி ஆகிய இடங்களில். யாழ்., நல்லூர் பகுதியில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: சுந்தரம்
021 2229177, 071 4624830
(சு-341)

**வாழ்த்துகின்றோம்**

இன்று யாழ். பல்கலைக் கழகத்தில் இளமாணி பட்டம் பெறுகின்ற எமது நிறுவன வரலாறு ஆசான்

**திரு.அருமைத்துரை பிரேமதாஸ்(B.A)**

அவர்களை மாணவர்களும் ஆசிரியர்களும் வாழ்த்துகின்றோம்.

I.B.S. **சுண்டுக்குளி**
தரம் 1 முதல் O/L,A/Lவரை
(1595)

Midea Electro Mart

LG Authorized Dealer for Abans Ltd.

**SCANNER**
CANON LIDE 100-6900/=
HP G 2410-9900/=

**PRINTER**
HP 1005 Laserjet-16,500/=
HP deskjet 3920-6500/=



| COMPACQ CQ3014 DESKTOP PC | |
|---|---|
| PROCESSOR | Intel core2 Duo 2.8 Ghz E7400 |
| MEMORY | 2 GB DDR2 |
| HART DISK | 340 GB 3Gb/s Hard Disk |
| DISK DRIVE | DVD Writter |
| MONITER | 19" LG LCD |
| UPS | Toyostar 650 VA |
| SPEAKER | 900w |
| MOUSE | Compaq |
| KEYBOARD | Compaq |
| PRICE | 81,900/= |



| PERSONAL PC SYSTEM | INTEL ATOM PC SYSTEM | INTEL DUAI CORE PC SYSTEM | INTEL CORE 2 DUO PC SYSTEM |
|---|---|---|---|
| PROCESSOR | Intel Atom 1.6 GHZ | Intel Dual core2.7GHZ | Intel core2 Duo 2.93 GHZ |
| MOTHER BOARD | Intel 945 GNL Main Board | Intel Chipset G31 main Board | Intel Chipset G31 main Board |
| MEMORY | 1GB DDR-II, 800MHZ | 1GB DDR-II 800MHZ | 1GB DDR-II, 800MHZ |
| HART DISK | 250GB SATA-7200RPM | 250GB SATA-7200RPM | 250GB SATA-7200RPM |
| DISK DRIVE | LG DVD Writer | LG DVD Writer | LG DVD Writer |
| CASING | ATX 500W Ccivo | ATX 500W Ccivo | ATX 500W Ccivo |
| MONITER | 16" LCD AOC | 16" LG LCD | 19" LG LCD |
| KEY BOARD | Multimedia ps\2 | Multimedia ps\2 | Multimedia ps\2 |
| MOUSE | Optical USB\Ps2 | Optical USB\Ps2 | Optical USB\Ps2 |
| SPEAKER | Genius Multimedia 900W | Genius Multimedia 900W | Genius Multimedia 900W |
| UPS | Toyostar 650 VA | Toyostar 650 VA | Toyostar 650 VA |
| PRICE | 44,500/= | 49,900/= | 59,900/= |

| LAPTOPS | COMPACQ 610 | PROLING MINI |
|---|---|---|
| PROCESSOR | Intel core 2 Duo 2.2 Ghz E7400 | Atom Intel 1.6Ghz |
| MEMORY | 2 GB DDR2 | 1 GB |
| HART DISK | 500GB HDD | 160 GB |
| DISK DRIVE | DVD Writter | Nill |
| CAMERA | Wab Camera | web Camera |
| MONITOR | 14.6" | 9" |
| OTHERS | WIFI Blue Tooth | WIFI Blue Tooth |
| PRICE | 81,000/= | 49,900/= |



★ Abans உத்தரவாதத்துடன் இலவச விநியோகத்தைப் பெற்றிடலாம்
★ Computers- Three Years Warranty
★ Fridge, washing machine and TV- Five Years Warranty

No:1-I, 1-H, STANLEY ROAD, JAFFNA, SRI LANKA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646,
E-mail:midea21@gmail.com






"இலங்கையில் பரீட்சிக்கப்பட்டுள்ள சகல வகையான இமல்சன் மற்றும் எனாமல் பெயின்ட் உற்பத்திகளின் வர்த்தக நாமங்களில் சர்வதேச பாதுகாப்புத் தராதரங்களுக்கு அமைவாக ஈயத்தின் அளவைக் கொண்டுள்ள பெயின்ட் வகை டியூலக்ஸ்



- மேலதிக ஈயம் அல்லது குரோமியம் கலந்த சாயங்கள் இல்லை.
- தீங்கு விளைவிக்கக் கூடிய கரைசல்கள் இல்லை.
- சகல உற்பத்தி செயல் முறைகளின் போதும் போதிய பாதுகாப்பு உண்டு.
- பாதுகாப்பான, சூழலுக்கு நட்புறவான மூலப் பொருட்களின் பாவனை.




பாதுகாப்பில் அக்கறையே - எமது செயற்பாட்டுக்கு அனுமதிப்பத்திரம்.

**Dulux**

**சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்**
70/1, மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்.

**சிவகுமரன் என்ரபிறைஸ்**
75, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

**காட்சியறை:**

**சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்**
கண்டி வீதி, சாவகச்சேரி.



கொமர்ஷல் வங்கியின்

# பொற் கடன்
# அடகுச் சேவை



**அதிகூடிய முதல்**
**குறைந்த வட்டி**

- தங்க ஆபரணத்திற்கு எதிராக வங்கி மேலதிகப் பற்று வசதி
- தங்க ஆபரணத்திற்கு அதிகூடிய முதல்
- உயர்ந்த இரகசியத் தன்மை
- தங்க ஆபரணத்திற்கு பாதுகாப்பு உறுதி
- குறைந்த வட்டி வீதம்

தற்போது தெரிவு செய்யப்பட்ட கொமர்ஷல் வங்கிக் கிளைகளில் அடகுச் சேவை வசதிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

COMMERCIAL BANK
www.combank.lk

# புகையிலைக்கட்டுப்பாட்டுக் குழு யாழ். மாவட்டத்தில் உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை, சுகாதார அமைச்சுடன் இணைந்து மாவட்ட புகையிலைக் கட்டுப் பாட்டுக் குழுவினை யாழ். மாவட்டத்தில் உருவாக்கியுள்ளது.

இக்குழுவின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஏப்ரல் மாதம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது. புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் கார்லோ பொன்சேகா மற்றும் திட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி பிரசன்ன கூரே ஆகியோர் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சுகாதாரத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், மதுவரித் திணைக்களம், கல்வித் திணைக்களம், சமுர்த்தி அதிகாரர சபை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களை உள்ளடக்கிய இக்குழுவானது, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது.

இக்குழுவின் செயற்பாடுகளாகப் புகையிலைப் பாவனை மற்றும் அவை தொடர்பிலான கைது நடவடிக்கைகள், வழக்குத் தொடர்தல் மற்றும் அபராதம் விதித்தல் போன்ற நடவடிக்கைகளைக் கண்காணித்தல், புகைப்பவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் புகைத்தலால் ஏற்படும் அபாயத்தினை மக்களுக்கு விளக்கும் அறிவூட்டல் நிகழ்வுகளை ஒருங்கமைத்தல், புகையிலைப் பாவனை சிறுவர் மட்டத்தில் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் , புகையிலைப் பாவனையிலிருந்து விடுபட விரும்புபவர்களுக்கு உதவும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ,

இப் பாவனையினைக் குறைக்கும் நடத்தை மாற்ற செயற்பாடுகளை பிரதேச மற்றும் சுகா தார வைத்திய அதிகாரி பிரிவு மட்டங்களில் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல், புகையிலை தொடர்பான உற்பத்திப் பொருட் களை சந்தைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பிலான விளம்பரங்களையும் அனு சரணை வழங்கல்களையும் தடை செய் தல், இவ் உற்பத்தி மற்றும் விற்பனை நிலை யங்கள் மீதான வரிவிதிப்பு தொடர் பிலான நடவடிக்கைகளை ஆராய்தல் , புகையிலைப் பாவனை ஒழிப்பு தொடர்பிலான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரச அதிகாரிகளை இணைக்கும் ஓர் அமையமாக செயற்படல், புகையிலைக் கைத்தொழில் தொடர்பிலான நிறுவனங்கள் தமது உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்து தலை மேம்படுத்துதல் தொடர்பாக மேற் கொள்ளும் சட்டவிரோத நடவடிக்கைகளை தேசிய புகையிலை மற்றும் மதுசாரம் மீதான அதிகாரசபைக்குத் தெரியப்படுத்துதல் போன்றன அமைகின்றன.

மேலும் புகையிலைப் பாவனை ஒழிப்பு தொடர்பிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் மற்றும் ஈடுபடத் திட்டமிட்டுள்ள நிறுவனங்கள் இக் குழுவின் இணைப்பாளரினூடாக தமது செயற்பாடுகளை மேற்படி அதிகாரசபைக்குத் தெரியப்படுத்துதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (2)

# வாரம் ஒரு தகவல்

## ஒரு நல்ல யோசனை!

"குட்மோர்னிங் மனேஜர் சேர்"

"குட்மோர்னிங்"

"உங்களுடைய மேசையில் சில பைல்களை வைத்திருக்கிறேன்."

"எல்லாத்தையும் பார்த்து இன்றைக்கு கிளியர் பண்ணி விடுகிறேன். அதில் சிலவற்றை ரொம்பவும் தீர்க்கமாக யோசித்து முடிவு எடுக்க வேண்டியிருக்கு."

"கரெக்ட் சேர். நான் தினமும் ஒரு விடயம் உங்களிடம் கவனித்திருக்கிறேன். காலையில் சரியாக 10 மணிக்கு அலுவலகம் வருகிறீர்கள். வந்ததும் உங்களுடைய இருக்கையில் உடனே உட்கார்வதில்லை. நின்று கொண்டே கடவுளை வணங்குகிறீர்கள். கொஞ்சநேரம் யோசிக்கிறீர்கள். அதற்கு பின்னர்தான் உட்கார்ந்து கையெழுத்து போடுகிறீர்கள்."

"ஆமாம் அது.... வந்து....."

"அது ஏன் என்று நானும் ரொம்ப நாளாக யோசித்ததுண்டு. நேற்று பத்திரிகையில் ஒரு கட்டுரை படித்தேன். அதற்குப் பின்னர்தான் விடயம் புரிந்தது."

"என்ன படித்தீர்கள்? என்ன புரிந்தது?"

"உட்கார்ந்து கொண்டு ஒரு விடயத்தைப் பற்றி யோசிப்பதை விட நின்றுகொண்டு யோசிப்பது நல்லதாம். சீக்கிரமாக ஒரு முடிவுக்கு வருவதற்கு அது வசதியாக இருக்குமாம். முக்கியமாக வயதானவர்கள், கடுமையான சூழ்நிலையில் வேலை பார்ப்பவர்கள் இவர்களெல்லாம் நின்று கொண்டிருக்கும் போது அவர்களுக்கு சிந்தித்து சீக்கிரமாக முடிவுக்கு வரக்கூடிய திறமை அதிகமாகிறது என்று சொல்கிறார் தென்கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Masx Vercryssen என்ற ஆராய்ச்சியாளர்.

ஒரு பிரச்சினையைப் பற்றி ஒருத்தர் உட்கார்ந்து கொண்டு யோசிக்கும் போது 5 இலிருந்து 20 சதவீதம் சீக்கிரமாக முடிவெடுத்து விடுகிறாராம். அவர் கண்டுபிடித்த முடிவு இது".

"நீங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கே?"

"அப்படியானால் நீங்கள் தினமும் அலுவலகத்துக்கு வந்ததும் உடனே இருக்கையில் உட்காராமல் நின்றுகொண்டு யோசிக்கிறீர்களே. அதற்கு இது காரணமில்லையா?"

"இல்லை. அதற்கு காரணம் வேறு"

"என்னது?"

"தினமும் நான் அலுவலகத்திற்கு வந்ததும் என்னுடைய பாதுகாப்புக்காக நான் கடவுளை வணங்குகிறேன். என்னுடைய இருக்கையில் யாராவது வழக்கம் போல குண்டூசியை செருகி வைத்திருக்கிறார்களா? என்று நிதானமாக நின்று பார்க்கிறேன். அதற்குப் பின்னர் தான் உட்காருகிறேன்".

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# "ஞானச்சுடர்" வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" ஆன்மீகச் சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் வெளி வந்துள்ளது.

கு.சோமசுந்தரம் , ஐக்கிவாசுதேவ் , பு.அருள்நேசன் , வாரியார் சுவாமிகள் , இரா. சாந்தன் , ச.யதுஷன் , சி.யோகேஸ்வரி , டாக்டர். இ.லம்போதரன் , பண்டிதர் சு.அரு ளம்பலவாணர் , செ.ஜடா , ஆறுமுகநாவலர் , சிவ. சண்முகவடிவேல் , சிவ.மகாலிங்கம் , பா.வேலுப்பிள்ளை , ந.அரியரத்தினம் , ச.லலீசன் , கற்கரைக் கற்பகன் , வல்வையூர் ஷப்பாண்ணா ஆகியோரது கட்டுரைகளும் மற்றும் வழமையான அம்சங்களும் இதில் உள்ளடக்கமாய் அமைந்துள்ளன.

எதிர்வரும் மலர் 150 ஆவது மலராக அதிக பக்கங்களுடன் வெளிவர இருப்பதால் ஞானச்சுடரைப் பெற்றுக் கொள்பவர்கள் கடிதம் மூலமோ தொலைபேசியூடாகவோ தாம் தொடர்ந்து பெற்றுக் கொள்வது தொடர்பாக உறுதிப் படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

# கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய மகோற்சவத்தைச் சிறப்புற நடத்தி வைத்த யாழ். கந்தர்மடம் பிரம்ம ஸ்ரீ பா.ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள் *கிரியா பூஷணம்* என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார். யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. த.கலாமணி தேவஸ்தானத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி மேற்படி பட்டத்தை வழங்கினார். (2)

# இராசி பலன்

*30-05-2010*
*(வைகாசி 16, ஞாயிற்றுக்கிழமை)*
*திருதியை முழுவதும்*
*மூலம் பிற்பகல் 3.12 மணிவரை*
*இராகுகாலம் 4.22-5.52 மணிவரை*
*சுபநேரம் 8.52-10.22 மணிவரை*
*திருஞான சம்பந்தர் குருபூசை,*
*திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை*
*அமிர்தசித்தம்.*

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத செலவு, ஆன்றோரால் கௌரவிக்கப்படல், வீண்பயம், ஆரோக்கியக் குறைவு. |
| இடபம் | போசன சுகம், எதிர்பாராத பகை, பிரயாண பயம், காரியதாமதம். |
| மிதுனம் | தெய்வ சிந்தை, அபூர்வ சந்திப்பு, பண வருவாய், திடீர் பயணம். |
| கடகம் | பணவருவாய், சத்துரு ஜெயம், தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி. |
| சிங்கம் | காரிய இடையூறு, மனச்சஞ்சலம், பிறருக்கு உதவுதல், பண விரயம். |
| கன்னி | கல்வியில் ஆர்வம், ரோக பயம், தாய்வழிஉறவு, தொழில் சிந்தை. |
| துலாம் | இனிய சம்பவம், புதிய பொருள் சேர்க்கை, வாக்குமேன்மை, உறவினர் வருகை. |
| விருச்சிகம் | விவாதம், எடுத்தகாரியம், தாமதமாகும், தனவிரயம், கௌரவக் குறைவு. |
| தனுசு | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, தொழில் முயற்சி, நல்ல செய்தி. |
| மகரம் | பிதா சிந்தை, சயனசுகக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு. |
| கும்பம் | சகோதரர் உதவி, கலந்துரையாடல், முயற்சி கைகூடும், தெய்வசிந்தை. |
| மீனம் | சுபநிகழ்வு, அதிக பிரயாசை, நண்பர்களின் உதவி, போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | |
| கத்தரிக்காய் | 100 | 120 | 90 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 65 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 80 |
| தக்காளி | 100 | 110 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 60 | 35 |
| கோவா | 90 | 110 | 70 |
| கரட் | 150 | 160 | 120 |
| பூசனி | 50 | 60 | 40 |
| புடோல் | 80 | 100 | 55 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 65 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 55 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 40 |
| பயற்றங்காய் | 120 | 140 | 130 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 60 |
| கறிமிளகாய் | 150 | 170 | 130 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 180 |
| போஞ்சி | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 35 | 40 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

## நவீனமயப்படுத்தப்படவுள்ள பால் சேகரிப்பு நிலையங்கள்


(கொழும்பு)

மில்கோ பால் தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்தி விஸ்தரிப்பு செய்வதற்காக டென்மார்க் அரசு 600 கோடி ரூபாவை கடனாக வழங்க முன்வந்துள்ளதாக மில்கோ நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் ரூபி ஜோசப் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் அம்பேவல,திகன, பொலனறுவை,நாரகன்பிட்டி ஆகிய இடங்களில் மில்கோ பால் தொழிற்சாலைகள் நவீன மயப்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை நாடளாவிய ரீதியில் உள்ள மில்கோ பால் சேகரிப்பு நிலையங்களும் நவீன மயப்படுத்தப்படவுள்ளன. (2)





அராலி அகாயக்குளம் விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனை பாராட்டிக்கௌரவிக்கும் நிகழ்வில் பரிபாலன சபை உறுப்பினர்கள் பொன்னாடை போர்த்துவதையும் வாழ்த்துமடல் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## பொன்சேகாவின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும்

### ரொபர்ட் ஓ பிளெக் தெரிவிப்பு



(கொழும்பு)

இராணுவத் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜனநாயக தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் ஜெனரல் சரத் பொன் சேகாவின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென தென் மற்றும் மத்திய ஆசிய வலயத்திற்கு பொறுப்பான அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் ரொபர்ட் ஓ பிளெக் தெரிவித்துள்ளார்.

இராணுவ நீதிமன்றில் தீர்ப்புக்கள் தொடர்பில் சிவில் நீதிமன்றில் மேன்முறை யீடு செய்ய முடியும் என இலங்கை அரசாங் கம் அறிவித்துள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வோஷிங்டனில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா தொடர்பான விசாரணைகள் சட்ட திட்டங்களுக்கு அமை வான முறையில் நடைபெறவேண்டும் என வும் இது தொடர்பில் அமெரிக்கா உன்னிப் பாக அவதானித்து வருவதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கும் அமெரிக்க ராஜாங்கச் செய லாளர் ஹிலாரி கிளின்டனுக்கும் இடையிலான சந்திப்பினைத் தொடர்ந்து ரொபர்ட் ஓ பிளெக் இதனை அறிவித்துள்ளார். (6)

## ஐ.தே.கட்சியை வெற்றிபெறும் கட்சியாக மாற்ற வேண்டும்

### டாக்டர். ஜயலத் ஜயவர்த்தன தெரிவிப்பு

ஐக்கிய தேசியக்கட்சி பிளவுபடாத வகையில் மறுசீரமைப்புக்கள் இடம்பெற வேண்டும். மேலும் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவுக்கும் முக்கிய பொறுப்பு வழங்கப் படவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

கட்சியின் மறு சீரமைப்பு வேலைத்திட்டங்கள் குறித்து விபரிக்கையிலேயே ஐக்கிய தேசியக்கட்சியின் மனித உரிமைகள் மற்றும் நிவாரணம் தொடர்பான உதவிச் செயலாளர் ஜயலத் ஜயவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

ஐக்கிய தேசியக்கட்சியை வெற்றி பெறும் கட்சியாக மாற்றியமைக்க வேண்டும் என்பது அனைவரினதும் அக்கறையாக காணப்படுகிறது. அரசாங்கம் ஒன்றை அமைக்கும் வகையில் கட்சியை கட்டியெழுப்ப வேண்டும் அதற்காகவே கட்சியை துரித கதியில் மறு சீரமைக்கும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

முக்கியமாக உயர் பதவிகளில் ஆரோக்கியமான மாற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான நடைமுறைகள் மறுசீரமைப்பு தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. செயற்குழுவிலும் இவ்விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவுக்கு மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பு காணப்படுகிறது. எனவே மறுசீரமைப்பு செயற்பாடுகளின் போது அவருக்கு முக்கிய பொறுப்பு ஒன்று வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் .மேலும் திறமையான பல எம்.பிக்கள் கட்சியில் உள்ளனர். அவர்களைக் கொண்டு ஐக்கிய தேசியக்கட்சி கட்டி எழுப்ப செயற்றிட்டம் துரித கதியில் மேற்கொள்ளப் படவேண்டும். அன்று ஐக்கிய தேசியக்கட்சி வீழ்ச்சியுற்ற காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன இளம் எம்பிக்களைக் கொண்டு கட்சியை கட்டியெழுப்பியதை நாம் ஞாபகத்தில் வைத்துள்ளோம் என்றார். (2-6)


BIT @ ESOFT

University of Colombo School of Computing

Jaffna & Nelliady

# BIT பட்டப்படிப்பிற்கு தொடற்சியாக இலங்கையின் நம்பர் 1 நிறுவனமாகத் திகழ்வது ESOFT மட்டுமே.

# ஒவ்வொரு வருடமும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் BIT பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களில் 50% மானோர் ESOFT மாணவர்களே.

2010 இல் நடந்த கொழும்பு BIT பட்டமளிப்பு விழாவில் ESOFT இன் சாதனைகள்.

➢ 18 தகைமைச் சித்தியடைந்த பட்டதாரிகள் (Class holder) 13மாணவர்கள் ESOFT மாணவர்களே..!

➢ பட்டம் பெற்ற 147 பட்டதாரிகளில் 72 மாணவர்கள் ESOFT இல் கல்வி கற்றவர்களே..!

தங்கப்பதக்கம், முதற்பரிசு வென்ற எமது சாதனை மாணவர்கள்.




BIT Plus கற்கும் மாணவர்கட்கு Esoft வழங்கும் இலவச கற்கை நெறிகள்.

Semester 1
> Fundamentals of Programming (Java)
> Hardware&Networking
> Web Designing

Semester 2
> Microsoft Certified Technology Specialisst
> Sun Certifications for Java Programmer

Semester 3
> Open Source Web Development
> Accounting Packages

Semester 4
> CCNA(Cisco Certified Network Associate)

Semester 5
> Project Class

Semester 6
> Linux Network Administration

ESOFT

Jaffna Branch: 114, Navalar Road, Jaffna. T.P- 0212224142

Nelliady Branch: 153,Jaffna Road, Nelliady T.P- 0212264940

புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

Call @ 077 309 9 308

# விசா மறுப்பு விவகாரம் ; மன்னிப்பு கேட்டது கனடா

(புதுடில்லி)

இந்தியப் பாதுகாப்புப் படை மற்றும் உளவுத் துறையினருக்கு விசா வழங்க மறுத்த விவகாரத்துக்கு இந்தியாவிடம் கனடா நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டுள்ளது.


இந்தியப் பாதுகாப்புப் படை, உளவுத் துறையில் பணியாற்றியவர்கள் கனடா செல்ல விசா கேட்டு விண்ணப்பிக்கும் படிவங்களை, கடந்த சில ஆண்டுகளாக கனடா தூதரகம் நிராகரித்து வந்துள்ளது.

காஷ்மீர் போன்ற இடங்களில் இவர்கள் பணியாற்றிய போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதால் அனுமதி மறுக்கப்படுகிறது என்று கனடா பகிரங்கமாக தெரிவித்தது.

இந்த செயலுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கனடாவுக்கு மத்திய அரசு கெடு விதித்திருந்தது.

இதையடுத்து, கனடா அரசு நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாக நேற்று குடியுரிமை துறை அமைச்சர் ஜாசன் கென்னி தெரிவித்தார்.


இந்திய உளவு அதிகாரிகளுக்கு திட்டமிட்டு விசா மறுக்கப்படவில்லை. அவர்கள் விண்ணப்பித்த படிவங்களில் தகவல்கள் சரியாக குறிப்பிடாமலும், எழுத்து பிழைகளும் இருந்ததால் விசா மறுக்கப்பட்டுள்ளது. இது எதிர்பாராமல் நடந்தது என்று அவர் தெரிவித்தார். (6)



சீனாவுக்கு விஜயம் செய்த இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், அந்நாட்டு பிரதமர் வென்ஜியாபோவை,பீஜிங்கில் சந்தித்துப் பேசினார்.

# காஞ்சிபுரம் கூரம் கிராமத்தில் தமிழன்னைக்கு கோயில்

(காஞ்சிபுரம்)



காஞ்சிபுரம் அருகே உள்ள கூரம் கிராமத் தில் தமிழன்னைக்கு கோயில் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கோயில் வைப்பதற்கான தமிழன் னை சிலை மாமல்லபுரத்தில் தயார் செய்யப்பட்டது. இச்சிலை காஞ்சிபுரம் எடுத்து வரப் பட்டு அங்கிருந்து பல்வேறு வீதிகளுக்கு ஊர்வலம் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த ஊர்வலத்தை தமிழ் வளர்ச்சி துறை மண்டல இயக்குநர் மு.ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். தமிழ் ஆர்வலர்கள் பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பின்னர் இச்சிலை கூரம் கிராமத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. (6)

# மேற்கு வங்கத்தில் ரயில் கவிழ்ப்பு; பலி எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

மேற்கு வங்க மாநிலத்தில் அவுரா - குர்லா ஞானேஸ்வரி எக்ஸ்பிரஸ் கவிழ்க்கப்பட்டதில் நேற்று 2ஆவது நாளாக மீட்புப் பணிகள் ந டந்தன. தாக்குதல் நடந்த இடம் போர்க்களம் போல காட்சி அளிக்கிறது. உறவினர்களை இழந்தவர்கள், விபத்து நடந்த பகுதியில் கதறி அழுதபடி உள்ளனர். உடல்கள் மீட்கப்படும் போதெல்லாம் அழுகுரல் அதிகரித்தது .

அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் குடிதண்ணீர் வசதியை கொல்கத்தாவில் இருந்து வந்திருந்த தேசிய பேரழிவு மீட்புப் படையினர் செய்து கொடுத்தனர்.

நேற்று காலை நிலவரப்படி பலியானவர்களின் எண்ணிக்கை 100ஐ தாண்டியது. மேலும் சிலரின் உடல் ரயில் பெட்டிகளுக்கு அடியில் சிக்கியுள்ளன.

எஸ்-5, எஸ்-6 ஆகிய 2 பெட்டிகளும் இன்னும் அகற்றப்படவில்லை. அந்த 2 பெட்டிகளுக்கு அடியில் ஏராளமானவர்கள் சிக்கியுள்ளனர்.

எனவே பலியானவர்கள் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இதுவரை 25 பேர் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளனர். மற்றவர்கள் உடல்கள் மிட்னாபூர், கரக்பூர் மருத்துவமனைகளில் வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை 60 உடல்கள் பிரேத பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. அடையாளம் காணமுடியாத உடல்களை அதிகாரிகள் படம் பிடித்துள்ளனர். வீடியோவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த வீடியோக் காட்சிகள் மருத்துவமனை முன்பு திரண்டுள்ளவர்களிடம் போட்டு காட்டப்படுகிறது. பலியானவர்கள் படங்கள் இணையத் தளங்களிலும் காட்டப்பட்டு வருகிறது.

மீட்கப்பட்ட உடல்களில் 4 உடல்கள் தவிர மற்ற அனைத்து உடல்களையும் மிட்னாபூர் மருத்துவக் கல்லூரி வைத்தியசாலை பிரேத அறையில் வைத்துள்ளனர். இதனால் அங்கு உடல்களைப் பெற வந்தவர்களின் கூட்டம் அலை மோதியபடி உள்ளது.

இதையடுத்து பொதுமக்களுக்கு உதவுவதற்காக மிட்னாபூரில் 2 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவமனையின் 2 அறைகளில், பலியானவர்களின் உடல்கள் வைக்கப்பட்டுள்ளன. உடல்களை அடையாளம் காணமுடியாத பட்சத்தில் டி.என்.ஏ. சோதனை செய்ய வேண்டியதிருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு மீட்கப்படும் உடல்கள் அனைத்தும் பதப்படுத்தப்பட்டுள்ளன. (2-6)

# கடைகள்,வர்த்தக நிறுவனங்களில் — தமிழில் பெயர்ப்பலகைகள் —

## கட்டாயமாக்க தமிழக அரசு உத்தரவு

(தேனி)

தமிழகத்திலுள்ள கடைகள், வர்த்தக நிறுவனங்களில், தமிழில் பெயர்ப்பலகைகள் வைப்பதை கட்டாயமாக்கி அரசு உத்தரவிட்டுள்ளது.

அனைத்து மாவட்ட ஆணையாளர்களும் சென்னை தொழிலாளர் நல ஆணையர் ஹேன்ஸ் ராஜ் வர்மா அனுப்பியுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது,

அனைத்துக் கடைகள், ஹோட்டல்கள், வர்த்தக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மற்ற மொழிகளில் வைக்க விரும்பினால் தமிழ் பெயருக்கு கீழே சிறிய எழுத்துக்களில் ஆங்கிலத்திலும், அதற்கு அடுத்தாற்போல் அந்தப் பகுதியில் உள்ள பிற மொழிகளிலும் எழுதிக்கொள்ளலாம்.

பெயர்ப்பலகையில் 5:3:2 என்ற விகிதத்தில் எழுத்துக்கள் இருக்கவேண்டும். தமிழில் 5 மடங்கு இருந்தால், அதற்கு கீழ் ஆங்கிலத்தில் அதில் மூன்று மடங்கும், பிறமொழி இரண்டு மடங்கும் இருக்க வேண்டும். திருத்தியமைக்கப்பட்ட தமிழ் எழுத்துக்களை மட்டுமே கண்டிப்பாக எழுத வேண்டும். தமிழ் பெயர் உள்ள அதே வரிசையில்வேறு மொழியில் பெயர் வரக்கூடாது. தமிழும், பிற மொழியும் கலந்து இருக்கக் கூடாது என்றார். (6)

## பாரதச் செய்திகள்

# காலுக்கு பாதிப்பு இல்லாமல் புற்றுநோய் கட்டி அகற்றினர்

## கோவை டாக்டர்கள் சாதனை

(கோவை)

சிறுவனின் கால் எலும்புமூட்டு புற்றுநோய் கட்டியை காலுக்கு பாதிப்பு இல்லாமல், கோவை அரசு மருத்துவமனை டாக்டர்கள் சத்திரசிகிச்சை செய்து அகற்றினர்.

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புற்றுநோய் அறுவை கிசிச்சை நிபுணர் சுரேஷ் வெங்கடாசலம் கூறியதாவது,

உடுமலையைச் சேர்ந்தவர் சிவக்குமார். இவரது மகன் ஹரிஹரன் (14). எட்டாம் வகுப்பு மாணவன்.

சில மாதங்களாக மூட்டு எலும்பு புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, நடக்க முடியாமல் அவதிப்பட்டான்.கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டான். பரிசோதனையில் இடதுகால் மூட்டுப் பகுதியில் புற்றுநோய் கட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. மூன்று முறை ஹிமோதெரபி அளித்து கட்டியைக் குறைத்தோம். காலுக்குப் பாதிப்பில்லாமல், அறுவைச் சிகிச்சை செய்து அகற்றப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன் மருத்துவத் துறையில் கால் பகுதியில் புற்றுநோய் தாக்கினால் காலை அகற்றும் நிலை இருந்தது.

தற்போது , நவீன மருத்துவ சிகிச்சையால், காலை அகற்றாமலேயே சிகிச்சை செய்யப்பட்டது. ஹரிஹரன் தற்போது நல்ல நிலையில் உள்ளான். இவ்வாறு சுரேஷ் வெங்கடாசலாம் தெரிவித்தார்.


கால் எலும்பு மூட்டில் ஏற்பட்ட புற்றுநோயை காலுக்கு பாதிப்பு இல்லாமல் அறுவைச் சிகிச்சை செய்து அகற்றிய டாக்டர் குழுவை, அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் குமரன், ஆர்.எம்.ஓ. சிவப்பிரகாசம் பாராட்டினர். (6)



மழை பெய்ய வேண்டி ஜார்க்கண்ட், ராஞ்சியைச் சேர்ந்த பழங்குடியின இளைஞர்கள், நேற்று முன்தினம் விநோதமான முறையில் கையில் தடியுடன் வழிபாடு நடத்தினர்.

# வடக்கில் மாகாண சபை, உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த நடவடிக்கை

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை விரைவில் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக வடக்கு அபிவிருத்திச் செயலணியின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிளிநொச்சி, சுன்னாகம் மற்றும் வவுனியாவுக்கான மின்சார இணைப்புத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டின் ஏனைய பகுதி மக்கள் அனுபவிக்கும் ஜனநாயக உரிமைகளை வட பகுதி மக்களும் அனுபவிக்க வகை செய்யப்படவேண்டும். அதன் நிமித்தம் விரைவில் இப் பகுதிக்கான மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப் படும்.

வடக்கு மக்களுக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வருவதுடன் அப்பிரதேசத்திற்கு தேவையான மின்சாரம் ,குடிநீர், சுகாதாரம், வீதி அபிவிருத்தி உட்பட அனைத்து அடிப்படை வசதிகளும் உட்கட்டமைப்பு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படவுள்ளன என்றார். (2-6)

# நாங்கள் மரணமடைந்தால் மலேசிய அரசுதான் பொறுப்பு

## சிறை வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் தெரிவிப்பு

உண்ணாவிரதம் இருக்கும் நாங்கள் மரணத்தை சந்தித்தால் அதற்கு மலேசிய அரசுதான் பெறுப்பு என்று ஈழத்தமிழர்கள் கூறியுள்ளனர்.

அவர்களின் உண்ணா நிலை போராட்டம் நீடிக்கிறது. மூன்று முறை அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தியும் தண்ணீர் கூட குடிக்காமல் உண்ணா விரதத்தில் 61 பேரும் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களில் அனுசன் என்பவர் மயக்கம் அடைந்தார். குணதாசன் என்பவர் வாயில் நுரை வந்த நிலையில் மயக்கம் அடைந்தார். இதேபோல் 65 வயதுக்கும் மேற்பட்ட 8 முதியவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. ஆனால் அங்கு மருத்துவ வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை. மேலும் புலர் மயக்கம் அடையும் நிலையில் உள்ளனர்.

தண்ணீர் குடியுங்கள், சாப்பிடுங்கள் என்று முகாம் அதிகாரிகள் துன்புறுத்துவதாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறியுள்ளனர்.

ஆனால் உண்ணாவிரத்தை கைவிட மறுத்துவருகின்றனர். எங்களை அகதிகளாக ஏற்றுக் கொள்ளும் நாட்டுக்கு அனுப்பிவையுங்கள் என்றும் உண்ணாவிரதம் இருக்கும் நாங்கள் மரணத்தை சந்தித்தால் அதற்கு மலேசிய அரசு தான் பெறுப்பு என்றும் ஈழத் தமிழர்கள் கூறியுள்ளனர். (2-6)

# இலங்கை தமிழ்த் திரைப்பட இயக்குநர் விசேட பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நுகேகொட பாகொட வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் டெட்டநேட்டர்கள், வெடி மருந்துகள் உள்ளிட்ட குண்டு வெடிப்புகளுக்கு பயன்படுத்தப்படும் பொருட்களை மறைத்து வைத்ததாக கூறப்படும் தமிழ்த் திரைப்பட இயக்குனர் விசேட பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுமதிப் பத்திரமின்றி 4.95 கிலோ கிராம் வெடி மருந்து, 7 ரெட்டநேட்டர்கள் மற்றும் உபகரணங்களை தன்வசம் வைத்திருந்த சம்பவத்துடன் சந்தேகத்தின் பேரில் மேல் மாகாண புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட தமிழரான திரைப்பட இயக்குனர் அரிச்சந்திரன் குமார்ரட்ணம் நேற்று முன்தினம் நுகேகொட நீதவான் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். அவரை எதிர் வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் திஸ்ஸ விஜேரத்ன உத்தரவிட்டார்.

விசேட அதிரடிப்படையில் குண்டு செயலிழக்கும் பிரிவின் ஊடாக கைப்பற்றப்பட்ட டெட்டநேட்டர்களை செயலிழக்க செய்து அது தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

வெடி பொருட்களை வைத்திருப்பதற்கான அனுமதிப்பத்திரம் தன்னிடம் இருப்பதாக சந்தேக நபர் கூறிய போதிலும் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. இதனால் விசாரணைகளை நிறைவு செய்ய முடியவில்லை எனவும் இதனால் சந்தேகநபரை பிணையில் விடுவிக்க வேண்டாம் எனவும் பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

இதனையடுத்து சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளை விடுத்த பிணைக் கோரிக்கையை நிராகரித்த நீதவான் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நீதிமன்ற அனுமதியுடன் மேல் மாகாண புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நுகேகொட- பாகொட வீதியில் அமைந்துள்ள 6ஆவது ஒழுங்கையில் ரோஷி அபேவிக்ரம என்பவரது வீட்டை சோதனையிட்டதாகவும் வீட்டின் மேல் மாடியில் இருந்த வெடி பொருட்கள் பெட்டியொன்றில் வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

போர் தொடர்பான அலிமங்கட, அக்னியன் போன்ற படங்களுக்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வெடிபொருட் களை தான் வைத்திருந்தாக குமார்ரட்ணம் தெரிவித்ததாகவும் எனினும் அவர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிப்பத்திரத்தை இதுவரை பொலிஸில் சமர்ப்பிக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குமார் ரட்ணம் சிங்கள திரைப்படங்களை இயக்கி வரும் தமிழராவர். அவர் பல முக்கிய சிங்களப் படங்களை இயக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# 30.05.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1431-நூற்றாண்டுகள் போர்: பிரெஞ்சு வீராங்கனை 19வயது ஜோன் ஒஃப் ஆர்க் றொவென் என்ற இடத்தில் ஆங்கிலேயர்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட நீதிமன்றத்தால் உயிருடன் தீ வைக்கப்பட்டு மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டாள்.
- 1539- தங்கம் கண்டுபிடிக்கும் நோக்கில் ஹெர்னாண்டோ டி சோட்டோ 600 படையினருடன் புளோரிடாவை அடைந்தான்.
- 1588-30 ஆயிரம் பேருடன் ஸ்பானிய ஆர்மாடா என்ற 130 ஸ்பானிய போர்க் கப்பல்களில் கடைசிக்கப்பல் ஆங்கிலக் கால்வாயை நோக்கிய பயணத்தை லிஸ்பனில் இருந்து புறப்பட்டது.
- 1635-முப்பதாண்டு போர்: பிராக் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.
- 1845- திரினிடாட் டொபாகோவுக்கு முதல் தொகுதி இந்தியர்கள் வந்திறங்கினர்.
- 1883-நியூயோர்க் நகரில் புரூக்ளின் பாலம் இடிந்து விழப்போவதாக எழுந்த வதந்தியை அடுத்து இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 12 பேர் இறந்தனர்.
- 1913- முதலாம் பால்க்கன் போர்: லண்டன் உடன்பாடு, 1913 எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது. அல்பேனியா தனி நாடாகியது.
- 1942-இரண்டாம் உலகப் போர்: ஆயிரம் பிரித்தானிய போர் விமானங்கள் ஜேர்மனியின் கொலான் நகரில் 90 நிமிடங்கள் குண்டுமாரி பொழிந்தன.
- 1966-முன்னாள் கொங்கோ பிரதமர் எவரிஸ்டே கிம்பா மற்றும் பல அரசியல் தலைவர்கள் பகிரங்கமாக தூக்கிலிடப்பட்டார்கள்.
- 1971- செவ்வாய் கோலின் 70 விழுக்காட்டைப் படம் பிடிப்பதற்காகவும் அதன் வளிமண்டலத்தை ஆராயவும் என மரைனர் 9 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1972-இஸ்ரேலின் விமான நிலையத்தில் ஜப்பானிய செம்படையினர் தாக்குதல் மேற்கொண்டதில் 24 பேர் கொல்லப்பட்டனர்.
- 1981- பங்களாதேசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் போது ஜனாதிபதி சியாவுர்ரகுமான் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1998- வடக்கு ஆப்கானிஸ்தானில் 6.6 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 5ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர்.
- 2003-எயார் பிராசின் கொன்கோர்ட் விமானம் தனது கடைசிப் பயணத்தை ஆரம்பித்தது.


## பிறப்புகள்

- 1899-மணிக்கொடி சீனிவாசன் தமிழ், ஆங்கிலப் பத்திரிகையாளர். (இ.1975)
- 1931-சுந்தர ராமசாமி, நவீன தமிழ் இலக்கியத்தின் எழுத்தாளர் (இ.2005)
- 1934-அலெக்சி லியோனொவ் சோவியத்/ரஷ்யாவின் விண்வெளி வீரர்.

## இறப்புகள்

- 1431- ஜோன் ஆஃப் ஆர்க் பிரெஞ்சு வீரங்கனை (பி.1412)
- 1960 - போரிஸ் பாஸ்ரர்நாக் ரஷ்ய எழுத்தாளர் நோபல் பரிசு பெற்றவர் (பி.1890)
- 1981- சியாவுர் ரகுமான் பங்களாதேஷ் ஜனாதிபதி(பி.1936)

**1815 இலங்கையிலிருந்து காயப்பட்ட போர்வீரர்களை ஏற்றிச் சென்ற பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆர்னிஸ்டன் என்ற கப்பல் தென்னாபிரிக்காவுக்கு அருகில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 378 பேரில் 372 பேர் கொல்லப்பட்டனர்.**



# தமிழ் வாக்காளர்களை பதிவு செய்வதில் சிக்கலான நிலைமை காணப்படுகிறது

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் வாக்காளர்களை பதிவு செய்யும் நடைமுறைகளில் சிக்கல் நிலைமை காணப்படுவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு தகுதியான 2 இலட்சத்து 25ஆயிரம் தமிழர்கள் காணப்பட்ட போதிலும் ஒரு இலட்சத்து 50ஆயிரம் பெயர்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனநாயக மக்கள் முன்னணி கட்சியினால் அண்மையில் தமிழ் வாக்காளர்கள் பதிவு தொடர்பில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கம்பஹா, களுத்துறை,கண்டி, நுவரெலியா, புத்தளம், மாத்தளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் இவ்வாறு அதிகளவான தமிழ் வாக்காளர்களின் பெயர்கள் தேர்தல் இடாப்பில் பதியப்படவில்லை எனக் குறிப்பட்ட அவர், வாக்க ளிக்கத் தகுதியான மொத்த தமிழ் சனத் தொகையில் 68 வீதமானவர்களே பதிவு செய்யப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளார்.

3 இலட்சம் தகுதியான தமிழ் வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் பதியப்படவில்லை என தெரிவித்துள்ளதுடன் நீதியானதும் சுதந்திரமானதுமான முறையில் வாக்காளர் பதிவு நடைபெறும் வரையில் தேர்தல் முறைமையில் மேலும் வேறும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது என தேர்தல் ஆணையாளரிடம் கோரியுள்ளார்.

தேர்தல் முறையில் திருத்தங்கள் ஏற்படுத்துவதற்கு முன்னர் பதியப்படாத வாக்காளர்கள் பதியப்பட வேண்டுமெனவும் யுத்தம் நிறைவடையும் வரையில் காத்திருந்ததாகவும் எதிர்காலத்தில் நியாயமான தமிழ் பிரதிநிதித்துவம் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ள தேர்தல் திணைக்களம் முனைப்புக் காட்டி வருவதாகவும் அதே முனைப்பு



தெற்கு தமிழ் வாக்காளர்கள் தொடர்பிலும் காட்டப்பட வேண்டும் எனவும் அவர் தேர்தல் ஆணையாளரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

தேர்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முன்னர் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார். (6)

## முன்னாள் புலி உறுப்பினர் புல்மோட்டையில் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் சிரேஸ்ட உறுப்பினர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த புலி உறுப்பினர் கிழக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

செல்வகுமார் உதயன் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் இவரை புல்மோட்டை கட்டகுளம் பிரதேசத்தில் வைத்து கைது செள்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2)

## வடமாகாண தமிழ்மொழித்தினம் - 2010

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தும் "வடமாகாண தமிழ் மொழித்தினம் 2010" நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சிகள் அபிவிருந்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (2)

## பதநீர் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் அமையப்பெற்றுள்ள பதநீர் வெல்ல உற்பத்தி நிலையத்தை பாராம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும் வடமாகாண ஆளுநரும் நேற்று முன்தினம் திறந்து வைத்தனர்.

பனை சார் உற்பத்திகளை பெருக்குவதற்கும் அதன் வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கும், தொழில்வாய்பைப்பெற்றுக் கொள்வதற்கும் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்தன் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், ஆளுநர் சந்திரசிறி, பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர் சந்திரகுமார், பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்றின் உதயன் உள்ளிட்டோர் தொழில்சாலையின் பணிகளைப் பார்வையிட்டதுடன் பணியாளர்களுடனும் கலந்துரையாடியிருந்தனர். (2)

## தேசிய பரீட்சைகள் தொடர்பான கொள்கைகளில் மாற்றம் குறித்து கவனம்

(கொழும்பு)

தேசிய பரீட்சைகள் தொடர்பான கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்ச பந்துல குணவர்தன தெரிவித்துள்ளா.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கும் போது, அநேகமான பரீட்சை வினாத்தாள்கள் கடினமானவை என பரவலாக குற்றம் சுமத் தப்படுகிறது.

குறிப்பாக உயர்தரப் பரீட்சைகள் மிகவும் கடினமானவை என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பேராசிரியர்கள் வினாத்தாள்களை தயாரிப்பதனால் மாணவர்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் எனவும் இணைந்த கணிதம், பொருளியல், இரசாயனவியல் போன்ற பாடங்களை மாணவர்கள் தெரிவதற்கு அதிக நாட்டம் காட்டுவதில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது.

பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முதலாம், இரண்டாம் ஆண்டு மாணவர்களினாலேயே சில உயர்தரக் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டிப்படுகிறது.

எனவே பரீட்சை வினாத்தாள் தயாரிப்பு தொடர்பில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட சகல தரப்பினரிடமும் கருத்து கோரப்படவுள்ள தாக மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடுமையான போட்டிப்பரீட்சைகளின் காரண மாக மாணவர்களின்நடைமுறை விடய அறிவு மங்கியுள்ளதாக ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (2-6)

## ஜேர்மனியில் புலிகளுக்காக நிதி திரட்டிய பெண் கைது

(கொழும்பு)

ஜேர்மனியில் புலிகள் இயக்கத்திற்கு நிதி திரட்டி வந்ததாக கூறப்படும் பெண்ணொருவர் இலங்கையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஜேர்மனியில் பாரிய போராட்டங்களை முன்னெடுத்தவர் இவரென்று கூறப்படுவதுடன் ஜேர்மனியிலுள்ள இந்திய தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களில் முக்கியமானவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரது உறவினர். தற்போது குறித்த பெண் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (2-6)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 30 |
| 07 | 04 |
| 1965 | 2010 |



அமரர்

### திருமதி சறோசா சாந்தலிங்கம்

கடந்த 30.04.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமாய் அனுதாபம் தெரிவித்தும், இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைப்பு வழங்கி உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.

குடும்பத்தினர்
தொ.பே. 021 3007875

(1594)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மான்புமிகு அமைச்சர்
K.N.டக்ளஸ்தேவானந்தா
(பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சு)



கௌரவ சில்வேஸ்திரி
அலன்றின் (S.A.உதயன்)
பாராளுமன்ற உறுப்பினர்



கௌரவ முருகேசு சந்திரகுமார்
(அசோக்) பாராளுமன்ற
உறுப்பினர்.



திரு. கந்தசாமி கமலேந்திரன்
(கமல்)
(யாழ். மாவட்ட அமைப்பாளர்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட அமைச்சர் K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களை வாழ்த்துவதோடு அவரின் பணி மேலும் சிறக்கவும், அவரோடு இணைந்து சேவை புரியும் ஏனைய அன்பு உள்ளங்களையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.



திரு.S.T.M. தர்மராசா (J.P)
(வலி.கிழக்கு அமைப்பாளர்
அச்சுவேலி)

சிறுப்பிட்டி மேற்கு பூமகள்
சனசமூக நிலைய நிர்வாகத்தினரும்
முன்பள்ளி ஆசிரியரும் மாணவர்களும்

(1593)

# சைவமும் தமிழும் தழைத்தோங்க புனிதவாய் மலர்ந்தழுத சம்பந்தர்

*வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்*
*துறை விளங்கப்*
*பூதபரம் பரை பொலியப் புனிதவாய்*
*மலர்ந்த ழுத*
*சீதவள வயற் புகலித் திருஞான*
*சம்பந்தர்*
*பாதமலர் தலைக்கொண்டு திருத்*
*தொண்டு பரவுவாம்.*

இன்று வரையும் சைவமும் தமிழும் தமிழ்ப்பண்பும் கலாசாரமும் வாழ்கிறது என்றால் எந்தப் பெரு மக்கள் காரணமாக இருந்தார்களோ,எந்தப் பெருமக்களுடைய பாடல்கள் காரணாக இன்றும் இருக்கின்றதோ, அந்தப் பெருமக்களை, அருளாளர்களை வணங்கி நன்றி தெரிவிக்கின்ற விழாத்தான் குரு பூசை.

குருபூசை என்பது நன்றி தெரிவிக்கிற விழாத்தான் குருபூசை எனும் பெருவிழா . நால்வர் பெருமக்களுடைய பொற்றாழ் திருவடிகளை அவர்கள் இறைவன் திருவடிகளைச் சேர்ந்த தினத்தில் கொண்டாடுகிறோம். அப்பேறு பெற்ற தினமான இன்று ஞானசம்பந்தரது திருவடிகளை நினைந்து வழிபட வேண்டும்.

சைவசமயத்தையும், தமிழையும் வாழ்விப்பதற்காகவும், நற்றமிழ் நல்ல ஞானசம்பந்த ருக்கு அந்தணப்பெருமக்கள் உபநயனம் எனும் முதல் சடங்கு செய்யும்போது முதல் மந்திரமான *காயத்திரி* என்னும் மகா மந்திரத்தை உபதேசிக்கும் போது சம்பந்தர் பெருமானான பிள்ளையார் அதற்கு மேலான மந்திரம் *நமசிவாய* எனும் பஞ்சாட்சர மந்திரம் என திருவாய் மலாந்தருளினார்.

தமிழ் நாட்டிலே புத்தம், சமணம் போன்ற புறச்சமயங்கள் தோன்றி சைவசமய வளர்ச்சியானது வலிமை குன்றிய காலத்து அப்புறச் சமயங்களை வேரறுக்கயென்று பண்டைய பெருமறைக்கருத்துக்களோடு எழுந்து ஓதவும் உன்னவும் ஒப்பில்லா மகிழ்வைத் தருவனாய் எண்ணியவற்றை எண்ணியாங்கு எய்துவிப்பினவாய் அன்போது ஓதுவார்க்கும், போற்றுவார்க்கும் வல்வினைகளை அறுப்பனவாய் செந்தமிழ் மொழிவளமும் செவ்விசைப்பண் வளமும் கொண்டவையாய் அற்புதங்களை அடியார்க்கு நிகழ்த்துவனவாய் பண்டைய தமிழியல் நூல் வழக்கிற்கேற்ப அகப்பொருள் இலக்கணங் களையும் புறப்பொருள் இலக்கணங்களை யும்

## இன்று குருபூசைத்தினம்

உடையனவாய், நிகழ்த்துவனவாய் புற விருள் நீக்கும் பகலவன் போல் அகவிருள் நீக்கும் அருமணிச்சுடர்களாய் விளங்குவன தெய்வத் திருமுறை நூற் தொகுதிகளாகிய பன்னிரு திருமுறைகளே.

சைவசமயத்தவர்களுக்குத் தமிழ் மொழியில் இந்த நூலைப்போல வேறு எந்தச் சமயத்தார்களுக்கும் வேறெம் மொழியிலும் இத்தகைய ஓர் அருநூற்தொகுதி இல்லை என்பது இங்கு குறிப்பிடற்பாலதாகும். இத்தகைய பன்னிரு திருமுறையில் முதல் மூன்று திருமுறைகளையும் அருளிச் செய்தவர் திருஞான சம்பந்தமூர்த்திநாயனார்.

***காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்க்கு பாட, மெய்யுருகும் ஊனுருகும் எலும்புருகும் உடம்புக்கு இரைதேடுவது*** போல உயிருக்கு இறை அருளைத் தேட வேண்டும். உடம்பை உணவு வளர்ப்பது போல உயிரை உணர்வுள்ளதாக்கும் சைவத்தையும் தமிழையும் சிவஞானத்தையும் இசைவடிவமான இறையுணர்வையும் எம்மக்களுக்கு ஊட்டிய ஞானாசிரியர்களை, குருமார்களை நாம் நன்றியுடன் நினைவு கூற வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

ஞானசம்பந்தர் பாடிய மூன்று திருமுறைகளும் ***திருக்குடைக்காப்பு*** என்று சிறப்பித்துச் சொல்லப்படும் ஒவ்வொரு பதிகத்தின் இறுதியிலும் இன்ன இன்ன பலன் கிடைக்குமென்று அறுதியிட்டுக்கூறுகின்றார். இப்பாடலை கடைப்பிடிப்பவர் ***வானில் அரசான்வர் ஆணை நமதே*** எனப்பாடியுள்ளார்.

ஞான நூலை ஓதல், நற்பொருளைக் கேட்டல் ,கேட்பித்தல், ஈனமிலாப் பொருள் தன்னைச் சந்தித்தல் இவை ஐந்தும் இறைவனைச் சிந்திக்கும் எழில் ஞான பூசை.

ஊனமிலா கன்மங்கள், தவச்செயல்கள், தியானம், ஒன்றுக்கொன்று இவையூட் டுவது போகம். ஆனவையான் மேலான ஞானத்தால் இறைவனை அர்ச்சிப்போர் வீடெய்த அறிந்

**க.கு.க.சிவபாலன்**
(அடியாருக்கு அமுதூட்டும் அண்ணலார்)

தோர் எல்லாம் என்று சிவஞான சித்தியார் எடுத்துப் பேசும்.

அந்தவகையிலே நாயன்மார் குருபூசை, மெய்யடியார்கள், சிவனடியார்கள்,



குருபூசைகளை செய்தல், செய்வித்தல், நடைபெறுவதைப் பார்த்தல், பங்குபற்றுதல் போன்றவையும் ஞானபூசை செய்த பலனைக் கொடுக்கும் என்று மனதிலே சிந்தித்து திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவடிகளை மனமொழி மெய்யினாலே வந்தித்து வாழ்வில் உய்வு பெறுவோமாக.

## புதிய தும்பு உற்பத்தி தொழிற்சாலை அச்சுவேலியில் திறந்து வைக்கப்பட்டது

(யாழ்பாணம்)

அச்சுவேலியில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள தும்புப் பொருள் உற்பத்தி தொழிற்சாலை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் . பெயர்ப்பலகையும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இத்தும்புப் பொருள் உற்பத்தி தொழிற்சாலையின் தொழிற்சாலை அலுவலகமும் தொழிற்பேட்டையையும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டன.

அத்துடன் தொழிற்பேட்டையில் உற்பத்தி செய்யப்படவுள்ள மாதிரிகளை அதிதிகள் பார்வையிட்டதுடன் அது தொடர்பான விளக்கங்களையும் உரிய அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதியுதவியின் கீழ் புரமைப்புச் செய்யப்பட்ட இந்த தொழிற்சாலையில் 40 பெண்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் முதற்கட்டமாக பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் காலப்போக்கில் இத்திட்டம் விரிவு படுத்தப்படவுள்ளதாகவும் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் செல்வராசா தெரிவித்தார். (2)

## இலங்கையில் நடைபெறவுள்ள திரைப்பட விழாவுக்கு தென்னிந்திய திரை உலகம் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச இந் திய திரைப்பட விழாவிற்கு தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை மற்றும் தென்னிந்திய திரைப்படத்துறையினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

வரும் யூன் மாதம் 4, 5, 6 ஆகிய மூன்று நாட்கள் கொழும்பு நகரில் சர்வதேச திர்ரைப்பட விருதுகள் விழா நடைபெறவுள்ள நிலையில் இதில் வட இந்திய நடிகர் - நடிகையர் தொழில் நுட்பக் கலைஞர்கள் தொழிலாளர்கள் யாரும் கலந்து கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நேற்றைய தினம் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை சார்பில் அனைத்து தென்னிந்திய திரைப்படத்துறை அமைப்புக்களையும் அழைத்து கூட்டுக்கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்தில் ***இரத்தக்கறை*** **படிந்த இலங்கையில் நடக்கும் இந்த திரைப்பட விழாவில் கலந்து கொள்ள வேண்டாம்** என எங்களது வட இந்திய நடிகர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள், தொழிலாளர் தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன இனி தென்னிந்திய மொழி திரைப்படங்களின் படப்பிடிப்பு மற்றும் கலை விழாக்கள் இலங்கையில் நடத்தப்பட மாட் பாது. இந்த விழாவில் கலந்து கொள்ளும் அனைத்து இந்திய நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் தென்னிந்திய திரைப்படத் துறையினர் தொழில் ஒத்துழைப்புத் தர மாட்டார்கள். இதில் கலந்து கொள்ளும் நடிகர் - நடிகையர் திரைப்படங்கள் தென்னிந்தியாவில் திரையிடப்படமாட்டாது. விழாவை நடத்தும் குழுவினருக்கு எங்களது வேண்டுகோள் என்னவென்றால் இந்த விழாவை அன்பு கூர்ந்து ரத்தக்கறை படிந்த இலங்கையில் நடத்த வேண்டாம். வேறு எந்த நாட்டிலாவது நடத்துங்கள் அதை நாங்கள் வரவேற்கிறோம் என்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், தென்னிந்திய நடிகர் சங்கம், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம், தமிழ்நாடு திரைப்பட இயக்குனர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட வினியோகஸ்தர்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர்கள் சங்கம், தென்னிந்திய திரைப்பட பத்திரிகை தொடர்பாளர்கள் சங்கம் ஆகிய அமைப்புகள் கலந்து கொண்டனர். (2-6)

## மீள்குடியேற்றப்பட்ட மக்களின் நிலைமை குறித்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

### த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

மீள் குடியேற்றப்பட்ட மக்களின் நிலைமை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு கட்சி பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தால் இடம் பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்களுக்கு அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் விஜயம் செய்திருந்தனர்.

இந்த விஜயத்தின் போது தமது கட்சி உறுப்பினர்களால் திரட்டப்பட்ட தகவல்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

12 பேர் அடங்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விஜயம் குறித்த அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இந்த அறிக்கை முதலில் பாராளுமன்றிற்கு சமர்ப்பிக்கப் படும் எனவும் பின்னர் ஊடகங் களுக்கு வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (6)

## சரணடைந்த புலிகளில் ஆயிரம் பேர் அங்கவீனர்கள்

### டியு குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அரசாங்கத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளில் ஆயிரம் பேர் அங்கவீனர்களாகக் காணப்படுவதாக அமைச்சர் டியு குணசேகர தெரிவித்துள்ளார்.

ஏசியன் ரியூன் இணையத் தளத்துடன் இடம்பெற்ற நேரடிக் கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் 11 ஆயிரம் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் கடந்த வருடம் அரசாங்கத்திடம் சரணடைந்ததாகவும் இதில் மூவாயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் எண்ணாயிரம் உறுப்பினர்கள் புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ் வளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(2-3)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### ஆதங்க மனசுகள்

சீதனமும் வேண்டுமாம்;ரசிக்க
சிவந்த நிறமாயுடல் வேண்டுமாம்;காணி
ஆதனமும் வேண்டுமாம்;ஓடக்
காரும் ஒன்று வேண்டுமாம்;அழகுச்
சாதனங்கள் பலவும் வேண்டுமாம்;கொஞ்சம்
சரிஞ்சு படுக்க கட்டிலும் வேண்டுமாம்;இந்த
வேதனை வாழ்வு எனக்கு வேணுமா;இருள்
விலகிடும் நிலைஇனித் தோன்றுமா?

அன்பரசி
மயிலிட்டி

### ஏமாற்றம்

காதல் எனும் பெயர் கொண்டு
என்னை உன்னவளாய்!
ஏற்றுக்கொண்ட -அந்த
நிமிஷத்தில் இருந்து...
ஆயுள் வரைக்கும்!
அன்பையே
அள்ளித் தருவாய் என்று
எண்ணிய எனக்கு
அழுகையை அல்லவா
அள்ளித் தந்துவிட்டு
நழுவிச் சென்றுவிட்டாய் நீ!

செல்வி.க.அருவி
புத்தூர் வடக்கு

### புரிந்தது எனக்கு

அம்மாவிடமிருந்தேன்
அன்பு வந்தது
ஆசிரியரிடம் படித்தேன்
பண்பு தெரிந்தது
நண்பரிடம் பழகினேன்
பாசம் புரிந்தது
காதலித்துப் பார்த்தேன்
ஏமாற்றம் தெரிந்தது
கல்யாணம் முடித்தேன்
கண்ணீர்தான் வாழ்க்கையென்ற
உண்மை புரிந்தது எனக்கு

ப.உதயகுமார்
அளவெட்டி வடக்கு

### என் நிலை...?

உருக்குலைந்த நிலையில்
உள்ளம்
மெல்ல மெல்ல
தளர்வடைந்து
உருகிப் போகிறது - என்
உறுதித் தன்மை
காலம் எனும் சக்கரத்தில்
தொடர்ந்தும்
பயணிக்க நினைத்தேன் - ஆனால்
காலனவன் விடவில்லை
அதை நான் தொடர
சிதறப்பட்ட என்
உடலின் சிதறல்கள்
பிய்த்தெறியப்படுகிறது
ஆங்காங்கே
நாதியற்ற நிலையில்
அனாதரவாய்
இழுத்துச் செல்லப்படும் - என்
உடலின் உறுப்புக்கள்
தெருவோரம் காணப்படுகிறது
உயிரற்ற என் உடல்

நவரத்தினம் சதீஸ்
கந்தர்மடம்

### ஏளனம்


சாதிக்கத்
தெரியாத
மனிதன்
ஆதிக்கம் செய்வதற்காய்
தனக்குத்தானே
எடுத்துக் கொள்ளும்
ஆயுதம்!

கொற்றையூர்
மகே- மேனன்

### ஆச்சிரம வாசலிலே...

அன்பாய் அன்னமிட்டு...
உதிரத்தால் பாலூட்டி...
உயிருக்கு ஆதாரமிட்டவள் - இன்று
ஆதரவின்றி அனாதையாய்
ஆச்சிரம வாசலிலே...அன்னை

பூலக்சி
கல்லுவம்




### இமயம் தொட...

உன் எதிர்கால
வாழ்வுக்காய்
வியர்வைத்துளியைப்
பரிசளி
சோர்வு கொண்டால்
சோதனைதான் மிஞ்சும்
வாழ்வை வெற்றிகொள்ள
உழைத்துவாழ்
உயர்வாய் சிகரமாய்...


மாவை. நா.கஜேந்திரா

### சுகமான வலிகள்

கிண்டிக் கிளறுகிறேன்
வலித்தாலும்
கிழங்குகள் தருகிறது கிடங்குகள்
கற்கள் வீசுகிறேன்
காயப்பட்டாலும்
கனி கொடுக்கிறது மரங்கள்
மெல்லிய மேனியில்
எத்தனை கீறல்கள் குத்தல்கள்
அத்தனையும் தாங்கி
அர்த்தங்கள் தருகிறது தாள்கள்
மேனி தேய்ந்துபோக
என் பிழைகளுக்காய்
அழிகிறது அழிறப்பர்கள்
அறிவில்லா
உணர்வில்லா
உயிரில்லா
அஃறிணைகள்
பிழைபொறுத்து புண்ணியம் செய்ய
ஆறறிவு அறிஞர்கள் நாம்
அன்றாடம் செய்வதென்ன?
வருகிற வலிகளின்
வடிவங்களை மாற்றி
மானிடம் மகிழ
சுகங்களை வடிவமைப்போம்

அ.அல்வின்
பொற்பதி குடத்தனை

# மௌனத்தின் தேடல் - 21



### இரக்கமற்ற உலகம்

உடன் பிறவாச் சகோதரனே
உறவுகளை இழந்து
தனிமையில் நீ கொள்ளும்
சோகம்...இந்த
உலகத்திற்குப் புரியாது - இது
இரக்கமற்ற உலகமடா

த.கேமா
கொக்குவில்

சரணாகதிக்கு
சாவுதான் பரிசானால்
சண்டையிலேயே சரிந்திருக்கலாம்
சர்வதேசமே! சர்வதிகாரத்தை
சனல் - 04 இல் கண்டுகொள்

து.துவாரகா
சங்கானை

சனல் - 4
தொலைக்காட்சியே
இந்தச் சிறுவனின்
ஏக்கத் தவிப்பு
இன்றாவது
உனக்குப் புரிகிறது!

க.தங்கலீலா
கரவெட்டிதெற்கு

உன் உரிமைக்கு உலைவைக்கும்
ஊனமுற்ற மனிதர்முன்
உன்முகத்தில் சோகத்தைக் காட்டாதே!
ஏனெனில்!
அவனால் பயன் ஏதும்
உனக்கில்லை

இ.தர்மசாந்தினி
குப்பிளான் தெற்கு

### ஒரு பிஞ்சுவின் குமுறல்

கொடிய யுத்தத்தால்
அன்னையை நானிழந்தேன்
கொடும் சுனாமியாய்
தந்தையை நானிழந்தேன்
செம்மணிப் பரப்பிலே
சகோதரர்களை நானிழந்தேன்
இடப்பெயர்வு அரக்கனால் -என்
உறவுகளை நானிழந்தேன்
இத்தனையும் இழந்த நான்
இறுதியில் என்னையும்
இழக்கத் தயாரான நிலையில்
என்னைக் காப்பாற்ற
இந்தப் பரந்த உலகினில்
யாருமேயில்லையா?

குறிஞ்சிக்கவி
குப்பிளான்

### சிந்திப்பது என்னவோ?

மனிதனாய் பிறந்துவிட்டதால்
அணிந்துகொள்ள
துணிகூட இல்லமல் - இங்கு
தனிமையில்...
சிந்திப்பது என்னவோ

த.நிவேதிதா
யாழ்ப்பாணம்

### தீர்ப்பு

நீதி தேவன்
நீதியற்றுப் போனதால்
நிர்க்கதியற்ற உன்நிலைகண்டு
நிலைதடுமாறி நிற்கின்றோம்

க.நிறோஜலா
கரவெட்டி தெற்கு

சனல் - 4 இன்
ஆதாரமான நீ
எம்மை அனாதைகளாய்
தவிக்க விட்டு எங்கு
சென்றுவிட்டாய்!

கோபி

### யாரிடம் முறையிடுவான்?

பிஞ்சு உள்ளம்
பள்ளிப் பருவம்
பாலகன் செய்த
பாதகம் என்ன?

தங்கத் தமிழன்
காரைநகர்

### என்ன பார்க்கிறாய்?

கைகட்டி வாய்பொத்தி
கம்பளையுமின்றி
கழுத்தில் ஒரு மாலையுடன்
தனிமையில் நீயிருந்து
என்ன பார்க்கிறாய் ?
பாலகனே!
உனை மண்ணிற்கு தந்த
அன்னை வருகிறாள் என்றா?
இல்லை - உனை
விண்ணிற்கு கொடுக்க யமன்
வருகிறான் என்றா?

மு.டிசாந்தினி
வட்டு இந்துக்கல்லூரி

# மௌனத்தின் தேடல்- 22



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 28.05.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.


-ஆசிரியர் -




வெளிவிவகார செயலாளர் ஜெயசிங்க,திறைசேரி செயலாளர் டாக்டர் பி.பி.ஜயசுந்தர தலைமையிலான இலங்கைக் குழுவினர் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதை முதல் படத்திலும், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் முன்னணி நிறுவனங்களின் இயக்குநர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், தொழிற்துறைசார் வல்லுநர்கள் ஆகியோரை கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்துக் கலந்துரையாடியதையும் படங்களில் காணலாம்.

# அரச நிறுவனங்களின் தலைவர்களாக பிரபல வர்த்தகர்கள்


ஹரி ஜெயவர்த்தன


நிமல் வெல்கம


சுசந்த ரத்நாயக்க


ஜனக ரத்நாயக்க

புதிய அமைச்சரவை நியமனங்களை அடுத்து அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.இதன்படி பல அரசநிறுவனங்களுக்கு பிரபல வர்த்தகப் புள்ளிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

டிஸ்ரிலறிஸ்கம்பனி, லங்காபெல் மற்றும் அற்கின் ஸ்பென்ஸ் போன்ற நிறுவனங்களின் தலைவரான ஹரி ஜெயவர்த்தன இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேர்ஷ்சன்ட் வங்கியின் தலைவர் ஜனக ரத்நாயக்க ஏற்றுமதி அபிவிருத்தி சபைத் தலைவராகவும், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் நிறுவனத் தலைவர் சுசந்த ரத்நாயக்க இலங்கை தேயிலைச் சபையின் தலைவராகவும் மற்றும் உபாலி குழுமத் தலைவர் நிமல் வெல்கம சிறிலங்கா ரெலிகொம்மின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து அரச வட்டாரத் தகவல்படி,

இப் புதிய நியமனங்கள் அரசாங்கத்தின் அடுத்த 6 ஆண்டுகளில் விரைவான பொருளாதார அபிவிருத்தி என்ற இலக்கை அடைவதை ஊக்குவிக்கும் நோக்குடையது எனவும் இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் தமது தொழிற்துறையை வெற்றிகரமாக்கிய அனுபவத்தைக் கொண்டு இவ் அரச நிறுவனங்களை தூக்கி நிறுத்துவர் என்ற எதிர்பார்ப்பிலுமே இந் நியமனங்கள் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் இப் புதிய நடவடிக்கை குறித்து பல்வேறுபட்ட கருத்துக்களும் தெரிவிக்கப்படுகின்றன.

தனியார் நிறுவனமொன்றின் நிறைவேற்றுஅதிகாரி ரஞ்சித் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், இது அரசாங்கத்தின் ஒரு அறிவுபூர்வமான நடவடிக்கை. அவர்கள் தொழில் வல்லுநர்கள். வர்த்தகத்துறையில் அனுபவமுள்ளவர்கள். இவர்களில் அநேகர் நஷ்டத்தில் இயங்கிய நிறுவனங்களை இலாபகரமான நிறுவனங்களாக மாற்றியவர்கள் என்பது கவனிக்கப்படவேண்டியது எனத் தெரிவித்தார்.

இதேவேளை களனிப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் அநுர கருணாதிலக தெரிவித்ததாவது, இவ்வாறு நியமிக்கப்படுபவர்களில் சிலர் முன்பும் அரச நிறுவகங்களில் ,தலைவர்களாக நியமிக்கப்பட்டதாகவும், எனினும் அவர்களால் சிறந்த அடைவை பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும், அவர்கள் தமது தீர்மானங்களை நடைமுறைப் படுத்த அரசியல் குறுக்கீடுகள் தடையாக இருந்தன எனவும் தெரிவித்தார்.

அரச ஊழியரான அசோக் ஹேரத் கருத்துத் தெரிவிக்கையில், இவர்களுக்கு அமைச்சர்களால் அரசியல் தலையீடுகள் இருக்காது என நினைக்கிறேன். ஏனென்றால் இவர்கள் ஜனாதிபதியினால் நேரடியாக நியமிக்கப்பட்டவர்கள். அவர் எதிர்பார்க்கிறார் நேர்க் கணிய மாற்றம் வர வேண்டும் என்று எனத் தெரிவித்தார்.

அரச நிறுவனங்கள் பல நல்ல நிதிநிலைமையில் இல்லை. அல்லது பாரிய நஷ்டத்தைக் கண்டுள்ளன. குறிப்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாரிய நஷ்டத்தில் இயங்குகின்றது. இவ்வாறான நிறுவனங்கள் தூக்கி நிறுத்தப்படுமா என்பதை காலமே தீர்மானிக்கும்.




# வர்த்தக செய்தித் துளிகள்

## இலங்கை வங்கி இலாபம் சரிவு

இலங்கை வங்கியின் தேறிய இலாபம் 31 மார்ச் 2010 இல் முடிபடைந்த காலாண்டு 10.8வீதம் குறைந்து 855 மில்லியன் ஆகப் பதிவாகியுள்ளது.இது கடந்த வருடம் இதே காலாண்டில் 958 மில்லியனாக இருந்தது எனவங்கியின் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் வங்கியின் மொத்த வருமானம் 2009 இல் 16.4 பில்லியன் ரூபாயாக இருந்தது இந்தக் காலாண்டில் 14.3 பில்லியனாக 12.9 வீதம் குறைந்துள்ளது.

## அவிவா என்.டி.பி. இலாபம் உயர்வு

அவிவா என்.டி.பி.காப்புறுதி 31 மார்ச் 2010 இல் முடிபடைந்த 3 மாதங்களுக்கான முதல் காலாண்டு வருமானம் 2.7 பில்லியன் ரூபாயாகும். இது கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுமிடத்து 42 வீத உயர்வாகும். அனால் 2009ஆம் ஆண்டு குழுமம் நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளதாகவும், ஆனால் தற்போது இலாபப் பாதைக்குத் திரும்பியுள்ளதாகவும் நிறுவன முகாமைப் பணிப்பாளர் ரூவ் தெரிவித்துள்ளார்.

## மேலும் 5 நிறுவனங்கள் பங்குத்தரகில்

கொமர்சல் வங்கி,இலங்கைவங்கி, றிச்சட் பீரிஸ் ,மக்லூட் குறூப் கார்றிச் லிமிட்ட்,இந்தியா இன்போ லைன்ஸ் ஆகிய 5 நிறுவனங்களுக்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, பங்குத் தரகர்களாக செயற்பட அனுமதி வழங்கியுள்ளதாக இலங்கை பங்குப் பரிமாற்றல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.03 | 114.62 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 162.07 | 165.42 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 138.25 | 141.58 |
| சுவிஸ் பிராங் | 96.68 | 99.64 |
| கனேடிய டொலர் | 104.56 | 107.95 |
| அவுஸ்திரேலிய டொலர் | 92.18 | 95.00 |
| சிங்கப்பூர் டொலர் | 79.71 | 81.59 |
| ஜப்பான் யென் | 1.24 | 1.28 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.39 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.97 | |

## 3 ஆண்டுகளில் செல்போன் பாவனையில் இந்தியா முதலிடத்தைப் பிடிக்கும்!

இந்தியாவில் செல்போன் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை வரும் 2013-ம் ஆண்டிற்குள் 115.90 கோடியாக உயரும் என லண்டனைச் சேர்ந்த இன்போர்மா டெலிகொம்ஸ் அன்ட் மீடியா என்ற நிறுவனம் மதிப்பீடு செய்துள்ளது. இதனையடுத்து, அதிக செல்போன் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள நாடுகளில் இந்தியா உலகஅளவில் முதலிடத்தைப்பிடிக்கும்.

மாதந்தோறும் அதிக வாடிக்கையாளர்களை ஈர்ப்பதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. சீனாவில், தற்போது வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ள நிலையில், அந்நாட்டில் இத்துறையில் வளர்ச்சி குறைந்து, 2013-ம் ஆண்டில், வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை 111 கோடியாக குறைந்துவிடும் என்று இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4250.99 | 24.50 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4761.35 | 39.57 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1091.53 | |

***உயர்வடைந்த பங்குகள்:*** ஜோன் கீல்ஸ் ஹோல்டிங், ஹேமாஸ் ஹோல்டிங் ,எச்.என்.பி., என்வெயர்மென்டல் றிசோசஸ் ,ரான்ஸ் ஏசியா ஹோட்டல்.
***சரிவைக் காட்டிய பங்குகள்:*** கார்ஷன்ஸ்,ஹேறாலீஸ் ,லங்கா ஓரிக்ஸ் லீசிங், வட்டவல பிளான்ரேசன் ,கப்பிற்றல் டெவலொப்மன்ட் &இன்வெஸ்மன்ட் கம்பனி.

# பங்காளிச் சண்டையைக் கைவிட அம்பானி சகோதரர்கள் திடீர் முடிவு

காப்பிரேட் உலகில் திடீர் திருப்பமாக வர்த்தகப் போட்டியில் ஈடுபட்டு வந்த அம்பானி சகோதரர்கள், இனிப் பகைமை மறந்து இரு குழுமங்களும் ஒத்துழைப்புடன் செயற்படும் என்று அறிவித்துள்ளனர்.

திருபாய் அம்பானி மறைவுக்குப் பிறகு மகன்கள் முகேஷ், அனில் அம்பானிகளுக்கு தாய் கோகிலாபென் முன்னிலையில் பாகப்பிரிவினை செய்யப்பட்டது. அப்போது ஒருவரது நிறுவனம் ஈடுபடும் தொழிலில் மற்றவர் போட்டி ஏற்படுத்தக்கூடாது என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது.

எனினும் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஷ் இன்டஷ்ரீஸ், அனிலின் ஆர்.என்.ஆர். எல். நிறுவனத்துக்கு குறைந்த விலையில் காஸ் விநியோகம் செய்வதற்கான குடும்ப ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தது.

இது தொடர்பான வழக்கில் சகோதரர்கள் மீண்டும் பேச்சு நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, இரண்டு குழுமங்களின் அதிகாரிகள் நிலையில் கடந்த சனிக்கிழமை பேச்சுத் தொடங்கியது. இந்நிலையில் திடீர் திருப்பமாக பழைய கருத்து வேறுபாடுகளை மறப்பதாகவும் ரிலையன்ஸ் குழுமங்கள் இரண்டும் இனி ஒத்துழைப்பு ,இணக்கத்துடன் கூட்டாகச் செயற்படுவது என்று முடிபு செய்துள்ளதாகவும் இரு தரப்பிலும் திங்கட்கிழமையன்று தனித்தனியாக அறிக்கை வெளியிடப்பட்டது. இதையடுத்து இரண்டு சகோதரத் தொழிலதிபர்களுக்கிடையிலான சமரசம் இந்தியத் தொழில்துறைக்கு ஆரோக்கியமானது என தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் முதலாவது பெரிய பணக்காரரும், உலகின் 4-வது பணக்காரருமான முகேஷ் அம்பானி தனது சம்பளஉயர்வை நிராகரித்துள்ளார்.

அவருக்கு ஆண்டுதோறும் ரூ.39.36கோடி ரூபாய் சம்பளம்



பெற அனுமதி இருக்கின்ற போதிலும் ஆண்டுச் சம்பளமாக 15 கோடி மட்டுமே பெற்றுக் கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் நிறுவன இயக்குநர்களில் ஒருவரான நகில் மெஸ்வாணிக்கு ஆண்டுச் சம்பளம் 11.14 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அம்பானி சகோதரர்களுக் கிடையே சமரசம் ஏற்பட்டதால் கடந்த செவ்வாய்கிழமை இந்திய பங்குச்சந்தை உயர்வுடன் தொடங்கியது. இதனால் இரு குழும நிறுவனப் பங்குகளிலும் முதலிட்ட முதலீட்டாளர்களுக்கு ஒரே நாளில் 18 ஆயிரம் கோடி இலாபம் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

கு.முருகதாஸ்





அச்சுவேலியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தும்புப் பொருள் உற்பத்தி தொழிற்சாலையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து நாடாவெட்டி திறந்து வைப்பதையும், தும்பு உற்பத்திப் பொருட்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# பௌத்த மத சிந்தனைகளை தமிழர்களும் பின்பற்ற வேண்டும்

## பிள்ளையான் கூறுகிறார்



(கொழும்பு)

எல்லா மதங்களும் நல்ல விடயங் களையே கூறுகின்றன. அதே போன்றே பௌத்தம். அவை கூறும் கருத்துக்களை பின்பற்றுவதன் மூலம் நாம் சிறந்த மனித னாகவும் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக வும் இருக்கமுடியும் என்று கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாங்கள் பௌத்த மத நிகழ்வுகளில் பங்குபற்றாத நடைமுறை இருந்தது. ஆனால் தற்போது அந் நிலைவரம் மாற்றப்பட்டு ஏனைய மதங்களையும் மதித்து நடக்கவேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

மட்டக்களப்பு கல்குடாவில் நடைபெற்ற வெசாக் தின மதவழிபாடு அன்னதான நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற் றும் போது, பௌத்தம் பாவம் செய்ய வேண் டாம் எனக் கூறுகிறது.

அம் மதம் சிங்களவர்களுக்கு மாத்திரம் சொந்தமனதொன்றல்ல் என்ற வரலாற்று உண்மைகளை என்னவென்பதை நீங்கள் அறிவீர்கள் என்றார்.

மேலும் கடந்த கால கசப்பான உணர்வுகளை மறந்து சகல இன மக்களையும் ஒன்றுசேர்க்கும் நிகழ்வாக எல்லோரும் ஒற்றுமையாக வாழப் பழகிக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை வெசாக் தினத்தில் உருவாக்க வேண்டும் என்றார். (2-6)

# சர்வதேச மன்னிப்புச் சபையை பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்ய வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

உலகெங்கும் இயங்கும் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வரும் சர்வதேச மன்னிப்புச் சபையை பயங்கரவாதஅமைப்பாக பிரகடனம் செய்ய வேண்டும் என்றும் அமைச்சரும் ஹெல உறுமயக் கட்சியின் கொள்கை வகுப்பாளருமான சம்பிக்க ரணவக்க கேட்டுள்ளார்.



பயங்கரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுப் பதன்மூலம் பயங்கரவாதிகளுக்கு உ த வி வ ரு ம் மன்னிப்புச் சபையை பயங்கரவாத அமைப் பாகப் பிரகடனப்படுத்துவதன் மூலமே உலகப் பயங்கரவாதத்தை அழிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசின் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எதிர்த்து வந்த மன்னிப்புச் சபையின் அறிக்கைகளையும் கண்டனங்களையும் பொருட்படுத்தாமல் செயற்பட்ட தலைமையினாலேயே நாடு விடுவிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை இயங்கும் வேறும் சில தன்னார்வ நிறுவனங்களும் பயங்கரவாதத்திற்கு உயிரூட்டமுனைவதாகவும் இதுகுறித்து அரசாங்கம் அவதானமாக இருக்கவேண்டும் எனவும் குறிப்பிட்ட ரணவக்க நாட்டு மக்களும் இந்த விடயத்தில் அவதானமாக இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (6)

# இலங்கையிலிருந்து தங்கக் கட்டிகளை கடத்திய நபர் சென்னையில் கைது

இலங்கையில் இருந்து 15 இலட்சம் இந்திய ரூபா மதிப்புள்ள தங்கக் கட்டிகளை வயிற்றுக்குள்வைத்து கடத்திவந்தவர் சென்னை விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில், கொழும்பிலிருந்து சென்னை மீனம்பாக்கம விமான நிலையத்துக்கு சென்ற விமானத்தில் பயணம் செய்த பயணிகளை சுங்க அதிகாரிகள் கண்காணித்தபோது ஒரு வாலிபர் சந்தேகத்துக்கு இடமான முறையில் காட்சி அளித்தார். அவரைப் பிடித்து அதிகாரிகள் விசாரித்தனர்.

அவரிடம் தடைசெய்யப்பட்ட பொருள் எதுவும் இல்லை என்று அவ் வாலிபர் கூறினார். எனினும் அதிகாரிகள் துருவித் துருவி சோதனைபோட்டனர். அப்போதும வயிற்றின் மலக்குடல் பகுதியில் மறைத்து வைத்து, தங்கக் கட்டிகளை கடத்திவந்திருக்கிறாரென ஒப்புக்கொண்டார்.

அதன்பின் குறித்த இளைஞனை தனியே அழைத்துச் சென்று முறைப்படி அந்த தங்கக் கட்டிகளை வெளியே எடுத்தார்கள். அதன் நிறை 800 கிராம் என்றும் அதன் மதிப்பு ரூ.14 இலட்சத்து 83 ஆயிரத்து 200 என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதிகாரிகள் அந்த வாலிபரை கைதுசெய்து தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)

# சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்

யாழ்.அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள் இன்று காலை 6.30 மணிக்கு பாடசாலை முன்றலிலிருந்து ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி போட்டிகளுக்கு தெல்லிப்பழை வைத்திய அதிகாரி க.ராதையன், அளவெட்டி தபாலதிபர் ஞான.சுகந்தினி, கிராமசேவையாளர்களான ந.உமாகாந்தன், கா.துவாரகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2)

## உயர்நீதிமன்ற நீதவான்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு திட்டம்

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதவான்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி உயர் நீதிமன்ற நீதவான்களின் எண்ணிக்கை மேலும் 15 இனால் அதிகரிக்கப்படவுள்ளது.

தற்போது 60 உயர் நீதிமன்ற நீதவான்கள் கடமையில் இருப்பதாகவும் இந்த எண்ணிக்கை 75 ஆக உயர்த்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1978 ஆம் ஆண்டு இரண்டாம் இலக்க நீதிமன்ற சட்டத்தின் அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை தங்காலை, நுவரெலியா, மாங்குளம், மாத்தளை மற்றும் குளியாபிட்டி ஆகிய நகரங்களில் புதிதாக உயர் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன. (6)

# தனங்கிளப்பு , மறவன்புலோ விவசாயிகளின் பிரச்சினைகளுக்கான தீர்வு காணப்படும்

## பிரதி விவசாய அமைச்சர் உறுதி





( தனங்கிளப்பு)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட விவசாய பிரதியமைச்சர் ஜெகத் புஸ்பகுமார தலைமையிலான குழுவினர் தென்மராட்சி தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதிகளுக்கு சென்று விவசாய, கமக்கார அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடல்களை மேற் கொண்டனர்.

இக் கலந்துரையாடல்களின் போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்த அமைச்சர் அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

உங்களுடைய பிரச்சினைகள் ஜனாதிபதி மற்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எடுத்துக் கூறப்படும் என்றும் கூறினார்.

இச் சந்திப்பின்போது விவசாயிகள் மற்றும் அவர்களின் சார்பில் மறவன்புலோ கமக்கார அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர், செயலாளர் குகானந்தம், தனங்கிளப்பு கமக்கார அமைப்பின் தலைவர் சதானந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் அமைச்சர் ஜெகத் புஸ்ப குமார தலைமையிலான குழுவினர் வயல் நிலங்களையும் சென்று பார்வையிட்டனர். (6-9-37)

# ஹீரோவானார் கலைஞரின் பேரன்



ரெட் ஜெயண்ட் மூவிஸ் மூலம் 'குருவி', 'ஆதவன்' படங்களைத் தயாரித்தவர் உதயநிதி ஸ்டாலின். இவர், இப்போது கமல்ஹாசன் நடிப்பில் கே. எஸ்.ரவிக்குமார் இயக்கும் 'மன்மதன் அம்பு', சூர்யா, ஸ்ருதிஹாசன் நடிப்பில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் '7 ஆம் அறிவு' படங்களை தயாரித்து வருகிறார்.

இந்நிலையில் உதயநிதி ஹீரோவாக நடிக்க, சில இயக்குநர்களிடம் கதை கேட்டு வந்தார். இதில் 'சிவா மனசுல சக்தி', 'பாஸ் என்கிற பாஸ்கரன்' படங்களின் இயக்குநர் ராஜேஷ் சொன்ன கதை பிடித்திருந்தது. அதில் நடிக்க சம்மதித்துள்ளார் உதயநிதி.

இது காமெடி கதை. படத்தின் தலைப்பு மற்றும் உதயநிதி ஜோடி யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. இப்போது 'பாஸ் என்கிற பாஸ்கரன்' படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் வேலைகளில் இருக்கிறார் ராஜேஷ். இந்தப் பட ரிலீசுக்குப் பின்னர் உதயநிதி ஸ்டாலின் ஹீரோவாக நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார்.

# கமல்ஹாசன் நடிக்கும் மன்மதன் அம்பு



'குருவி', 'ஆதவன்' படங்களைத் தொடர்ந்து ரெட் ஜெயண்ட் மூவிஸ் சார்பில் உதய நிதி ஸ்டாலின் தயாரிக்கும் படத்தில் கமல்ஹாசன், த்ரிஷா ஜோடி சேர்கின்றனர். முதலில் இப் படத்துக்கு 'யாவரும் கேளீர்' என்ற பெயர் பரிசீலனையில் இருந்தது.

இப்போது மாற்றப்பட்டு 'மன்மதன் அம்பு' எனப் பெயரிடப் பட்டுள்ளது. இன்னொரு ஜோடியாக மாதவன், சங்கீதா நடிக்கின்றனர். ஏற்கனவே இந்த ஜோடி 'எவனோ ஒருவன்' படத்தில் இணைந்து நடித்திருந்தது.

# குற்றப்பிரிவு


திரை விமர்சனம்



காவல்துறையின் நல்ல பொலிஸ் அதிகாரி ஸ்ரீகாந்த். கெட்ட பொலிஸ் பிருத்விராஜ். இருவரும் நண்பர்கள். சரணடைய வரும் சில தீவிரவாதிகளை கைப்பாவைகளாக்கி ஆள்கடத்தல், பணம் பறிப்பு, கொலை என சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிறார் பிருத்திவிராஜ்.

இதைக் கண்டு பிடிக்கும் பொறுப்பு ஸ்ரீகாந்திடம் தரப்படுகிறது. பக்கத்திலேயே வில்லனை வைத்துக் கொண்டு தேடுகிறார் ஸ்ரீகாந்த். ஒரு கட்டத்தில் பிருதிவிராஜ் தான் அனைத்துக்கும் காரணம் என்பதைக் கண்டுபிடித்து விடுகிறார். அவரை ஆதாரத் தோடு பிடிக்கச் செல்லும் போதெல்லாம் தப்பித்துக் கொள்கிறார் பிருத்வி. கடைசியில் பிருதிவிராஜை ஸ்ரீகாந்த் எப்படி மடக்குகிறார் என்பது கிளைமாக்ஸ்.

மென்மையான ஹீரோவான ஸ்ரீகாந்துக்கு விறைப்பான பொலிஸ் கரக்டரும் கச்சிதமாகப் பொருந்துகிறது. நிமிர்ந்த நடை, நறுக்குப் பேச்சில் ஆச்சர்யப்படுத்துகிறார். கண்ணில் விசத்தையும் முகத்தில் சிரிப்பையும் வைத்துக் கொண்டு வில்லன் விளையாட்டை சீரியசாக ஆடுகிறார் பிருத்விராஜ். ஸ்ரீகாந்த் அவரை துரத்துவதும் அதிலிருந்து



பிருத்விராஜ் தப்பிப்பதும் சரியான ஆடுபுலி ஆட்டம்.

கடைசியில் அவர் மாட்டிக் கொள்ளும் அந்த செல்போன் சமாச்சாரம் சுப்பர். கமலினி முகர்ஜி ஸ்ரீகாந்தை காதலித்து அவரை தவறாக நினைத்துப் பிரிகிறார். பின்னர் சேரும் போது இறந்து அனுதாபத்தை அள்ளுகிறார். சஞ்சனா ஹீரோவை துரத்திக் காதலிக்கும் வழக்கமான மெழுகு பொம்மை. சண்டைக் காட்சிகளும், சேசிங் காட்சிகளும் படத்துக்கு விறுவிறுப்பூட்டுகிறது.

பாடல்கள் ஆக்ஷன் காட்சிகளுக்கிடையே ரசிகர்களுக்கு ரிலாக்ஸ் தருகிறது.


பரபரப்பான திரைக்கதையுடன் விறுவிறுப்பான ஆக்ஷன் படத்தை தந்திருக்கிறார் இயக்குனர் மன்மோகன்.

# தியேட்டர் அதிபர்கள் விஜய்க்கு இறுதி கெடு!

விஜய் படங்களுக்கு தடை போடுவது தொடர்பாக தியேட்டர் அதிபர்கள் இறுதி கெடு விதித்துள்ளனர். திரையரங்க உரிமையாளர்கள் விஜய்க்கு தடை போட கூட்டம் போட இருக்கிறார்கள் எனும் செய்தி கடந்த வாரம் காட்டுத் தீ போல் தமிழகத்தில் பரவியது. விஜய்யின் சமீபகால படங்கள் தந்த நஷ்டத்தை விஜய் அடுத்த படத்தில் ஈடுகட்ட வேண்டும் எனும் ஒப்பந்தத்திற்கு அவர் வர வேண்டும். அப்படி வராவிட்டால் அவருக்கு தடை எனும் முடிவில் கடந்த வாரம் கூடவிருந்த தமிழ் நாடு திரையரங்க உரிமையாளர்கள் சங்க கூட்டத்தை ஒத்தி வைத்தனர்.

ஆனால் புதன்கிழமையும் கூட்டம் நடக்கவில்லை. பத்திரிகையாளர் சந்திப்பும் இரத்துச் செய்யப்பட்டது. இதற்குக் காரணம் திரையரங்க உரிமையாளர்களுடன் விஜய்யின் அப்பா எஸ்.ஏ.சந்திரசேகர் சமாதானத்திற்கு ரெடியாகி வருவதர்க வந்த தகவல் தானாம். அதே நேரம் சமாதானப் பேச்சு நடந்து வருவதாகவும் கூறப்பட்டது. விஜய் படங்களால் சமீப காலமாக தியேட்டர் அதிபர்களுக்கு சுமார் 30 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்நிலையில் நேற்று தமிழ்நாடு தியேட்டர் அதிபர்கள் சங்க பொதுச்செயலாளர் ரோஹினி ஆர். பன்னீர்செல்வம், செயற்குழு உறுப்பினர் திருச்சி ஆர் ஸ்ரீதர் ஆகியோர் நிருபர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது, விஜய் நடிப்பில் வெளியான படங்கள் அடுத்தடுத்து தோல்வியை தழுவியுள்ளன. அடுத்தடுத்து 6 படங்களால் தியேட்டர்களுக்கு பல கோடி நஷ்டம் ஏற்பட்டிருக் கிறது. இதனை நடிகர் விஜய் ஈடுகட்ட வேண்டும். குறைந்த பட்சம் நஷ்டத் தொகையில் 30 சதவீதத்தையாவது திருப்பித்தர வேண்டும். நஷ்டத்தை ஈடுகட்ட படம் நடித்துக் கொடுக்க வேண்டும். அப்படி தராவிட்டால் சங்கத்தில் செயற்குழுவை கூட்டி இறுதி முடிபு எடுக்கப்படும் என்று கூறினார். கடந்த ஆண்டில் வெளியான படங்களில் பல படங்களை வெற்றிப்படம் என்று தயாரிப்பாளர்கள் விளம்பரப்படுத்தினாலும் தமிழ்ப்படம் அங்காடித் தெரு, பையா ஆகிய படங்கள் மட்டுமே தியேட்டர்களுக்கு இலாபம் சம்பாதித்துக் கொடுத்துள்ளது என்றும் தயேட்டர் அதிபர்கள் கூறினர்.



# தண்டனைகள் தப்பு அல்ல




முக்கிய வேடத்தில் ஆதித்யா, பிரேம்குமார், சுகுமார், "காதல்" கண்ணன் நடிக்கிறார்கள். நா.முத்துக்குமார், கே.நிஷாந்த், வி.கே. ஞானசேகர் பாடல்கள் எழுத, கே.எஸ்.மனோஜ் இசையமைக்கிறார்.

"தற்போதைய டிரெண்டில் யதார்த்தமான படங் களுக்கு ரசிகர்கள் நல்ல வரவேற்பைத் தருகிறார் கள். சினிமாவுக்காக எந்த காட்சியையும் வலுக் கட்டாயமாக திணிக்காமல் ரசிகர்களின் மனதை பிரதிபலிக்கக் கூடிய வகையில் இயல்பான வசனங்களையும் காட்சிகளையும் படமாக்கியுள் ளோம், என்கிறார் இயக்குநர் வி.கே. ஞானசேகரன்.

தவறு செய்பவர்களுக்கு கொடுக்கின்ற தண்டனைகள் தப்புக் கணக்குகளில் சேராது. தவறு செய்பவர்கள் எல்லோரும் சாமிதான். அதேபோல் நான் சிவனாகிறேன் படத்தில் நாயகனும் தன்னை சிவனாக எண்ணிக் கொண்டு தவறு செய்பவர்களை தண்டிக்கிறான்.

இந்தப் படம் ரசிகர்களுக்கு ஒரு புது அனுபவத்தை தருவது நிச்சயம் என்கிறார் படத்தின் இயக்குநர் வி.கே. ஞானசேகரன். எம்.என்.கிரியேஷன்ஸ் சார்பில் சி.கே. தயாரிக்கும் இதில் நாயகனாக உதய் கார்த்திக் நடிக்கிறார். நாயகியாக வர்ஷா நடிக்கிறார்.




# விஜய்க்காக சம்பளத்தை குறைத்த அசின்



நடிகர் விஜய்யுடன் ஜோடி போடுவதற்காக நடிகை அசின் தனது சம்பளத்தில் ஒன்றரை கோடியை குறைத்திருப்பதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது. போக்கிரி படத்தில் விஜய்- அசின் ஜோடியின் நடிப்பு ரசிகர்களால் பாராட்டப்பட்டது.

அசின் பாலிவுட் பக்கம் போய் விட்டதால் மீண்டும் இந்த ஜோடி நடித்து திரையில் தோன்ற வாய்ப்பில்லை என்று கூறப்பட்டது. ஆனால் பாலிவுட்டில் எதிர்பார்த்த அளவுக்கு வரவேற்பு இல்லாததால் மீண்டும் தமிழ் சினிமா மக்கம் வந்த அசினுக்கு விஜய்யுடன் ஜோடி போடும் வாய்ப்பு கிடைத்தது.

இந்தி படவுலகில் 3 கோடி ரூபாய் வரை சம்பளம் வாங்கிய அசின் விஜய்யுடன் ஜோடி சேரும் வாய்ப்பு என்பதால் தனது சம்பளத்தை ஒன்றரைக் கோடி ரூபாயாகக் குறைத்துள்ளாராம்.

# மீண்டும் சரித்திர படம்! செல்வராகவன் முடிவு!



சோழர் கால வரலாற்றுப் பின்னணியில் "ஆயிரத்தில் ஒருவன்" படத்தை இயக்கிய இயக்குநர் செல்வராகவன் தற்போது மீண்டும் ஒரு வரலாற்று படத்தை இயக்க முடிவு செய்திருக்கிறார். தமிழ்மற்றும் தெலுங்கில் எடுக்கத் திட்டமிட்டிருக்கும் இந்தப் படம் 5 ஆம் நூற்றாண்டு சரித்திர கதையாம்.

இந்தப் படத்தை ராமநாயுடுவின் 'சுரேஷ் புரொடக்ஷன்ஸ்' நிறுவனம் தயாரிக்கவுள்ளது. தெலுங்கு நடிகர் ராணாதான் ஹீரோவாக நடிக்கப் போகிறாராம். அவருக்கு ஜோடியாக நடிக்கும் நடிகை யார்? என்பது இன்னமும் முடிவாகவில்லை. படத்தின் பெரும் பகுதி அடர்ந்த காடுகளில் எடுக்கப்படவுள்ளது.

ஆயிரத்தில் ஒருவன் போல இந்தப் படத்தை இழுஇழுவென இருக்காமல் விரைந்து முடிக்க தேவையான வசதிகள் அனைத்தும் தயாராகி வருகிறதாம். இந்தப் படம் தனது சினிமாப் பயணத்தில் முக்கியத்துவம் வாய்ந்த படமாக இருக்கும் என்று கூறியிருக்கிறார் செல்வராகவன்



# நம் கண்களே நம்மை ஏமாற்றும் மஜிக் உலகம் எப்போது தோன்றியது?

பழங்கால உலக மஜிக்கின் தலைநகராக இருந்தது எகிப்து. அங்கே மஜிஷியன்கள் தண்ணீரை இரத்தமாக மாற்றினார்கள். திடீர் என்று சட்டைப் பையில் இருந்து சிறிய விலங்குகளை உருவாக்கினார்கள். எகிப்தியர்கள் வணங்கும் கடவுள் சிலைக்கு அருகிலேயே மஜிக் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மஜிக் என்பது 'கடவுள் கொடுத்த வரம்' எனப் பிரசாரம் செய்யப்பட்டது. இதனால் மக்கள் பயபக்தியோடு கடவுளை நம்பி வணங்க ஆரம்பித்தார்கள்.

மஜிக் என்பது கண்கட்டி வித்தை என்கிற பிரசாரம் தொடங்கியபோதே மக்களை மிரட்டுகிற மாதிரி இன்னொரு பக்கம் ப்ளாக் மஜிக் வளர ஆரம்பித்தது. எகிப்தில் டியுமா என்ற இடத்தில் இருந்த அஸ்ஸிம் என்பவர் இறந்து போன கன்றுக் குட்டிக்கு உயிர் கொடுத்து முதன்முதலாக ப்ளாக் மஜிக்கைப் பிரபலப் படுத்தினார். அதாவது பரவாயில்லை.... நெவுசேட் நெட்சர் என்ற சிலைக்கு இவர் உயிர் கொடுக்க மக்கள் மிரண்டு போனார்களாம்.

1756 முதல் 1781க்கு இடைப்பட்ட காலங்களில் ஜேக்கப் ஃபிலடெல் ஃபியா என்பவர் மஜிக் என்பது தந்திரம்தான். அதை அறிவியல்பூர்வமாக அணுக வேண்டும் என்று அறிவித்தார். அதன் பின்னரே மக்கள் மஜிக் பற்றிய பயத்தில் இருந்து விலகி ரசிக்க ஆரம்பித்தார்கள்.

மஜிஷியன் என்றால் அலைபுரளும் தலைமுடி, தொப்பி, கறுப்பு அல்லது சிவப்புக் கலரில் டெய்ல்கோட் ,பான்ட், வெள்ளைச் சட்டை ,க்ளவுஸ் ,ஸ்டிக் என்ற தோரணையை ஏற்படுத்தியவர் அலெக்ஸாண்டர் ஹெர்மான் என்ற மஜிஷியன்.

இந்த மாதிரியான ஜிகுஜிகு உடைகள் மக்களின் கவனத்தைக் கவர்ந்து மற்ற விடயங்களை மறைத்ததால் இன்று வரை இந்த ஸ்டைலைத்தான் பெரும்பாலான மஜிஷியன்கள் பின்பற்றுகிறார்கள்.

தங்களின் திறமையாலும் தந்திரத்தாலும் யாருக்கும் கெடுதல் செய்யாமல் மக்களை மகிழ்வித்து ஏமாற்றுவதுதான் மஜிஷியன்களின் வேலை. அதனால் அவர்களை மேலை நாடுகளில் செல்லமாக எப்படிக் கூப்பிடுவார்கள் தெரியுமா?

நேர்மையான பொய்யர்கள்!

## மந்திரக் கீரி




1931 இல் நடந்தது இந்தக் கதை. இங்கிலாந்துக்கு அருகே ஒரு சின்னத் தீவு, ஐல் ஒஃப் மேன். மனிதனின் தீவு என்று அர்த்தம். அங்கே ஒரு பண்ணை வீட்டில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார் ஜிம் என்கிற முதியவர். ஒருநாள் வீட்டின் பின் பக்கம் இருந்து வித்தியாசமான சத்தம். போகப் போக சத்தம் கூடிக் கொண்டே இருந்தது.

இது தொடர, ஒருநாள் நாய் மாதிரி குரைத்தார் ஜிம். பதிலுக்கு புதரில் இருந்து நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. ஒரு கூட்டத்தில் ஜிம் என்ன பேசினாலும், புதரில் இருந்து அதே சத்தம் எதிரொலிக்க ஆரம்பித்தது. அந்த எக்ஸ் பார்ட்டிக்கு ஜெஃப் என்று பெயர் வைத்தார் ஜிம். ஒருநாள் புதரைவிட்டு வெளியே வந்த ஜெஃப்பைப் பார்த்து அசந்துவிட்டார் ஜிம்.

காரணம், அது ஒரு கீரிப்பிள்ளை. கொஞ்ச நாட்களில் அந்தகீரி, ஜிம் குடும்பத்தோடு ஐக்கியமாகிவிட்டது. தான் இந்தியாவிலிருந்து வந்ததாக அறிமுகப்படுத்திய ஜெஃப் ஜிம் குடும்பத்துக்கு அவ்வப்போது முயல்கள் பிடித்துக் கொடுத்தது.

கோபம் வந்தால் திட்டவும் செய்தது. ஒரு கட்டத்தில் ஜிம், வீட்டைக் காலிசெய்து விட்டுக் கிளம்பினார். ஜெஃப் அவர்களைப் பின்தொடரும் என்று அனைவரும் எதிர்பார்த்தார்கள். புதருக்குள் சென்ற ஜெஃப் அதற்கடுத்து தட்டுப்படவே இல்லை. ஜெஃப் உடலில் ஒரு மந்திரவாதி புகுந்ததால் அது பேசியது என்று இன்றும் சொல்பவர்கள் உண்டு!

## நீரில் நடப்பார்... காற்றில் மிதப்பார்!

அமெரிக்காவின் கீரிஸ் ஏஞ்சல்ஸ் இப்போது அமெரிக்க மஜிக் உலகின் மன்னன். இசையமைப்பாளர், பாடகர், பைட் மாஸ்டர் எனப் பலவித முகங்கள் இருந்தாலும் பொது இடங்களில் திடீர் திடீரெனச் செய்யும் மஜிக்தான் இவரது புகழ் அடையாளம்.

தண்ணீரில் நடப்பது, உயரமான கட்டத்தில் இருந்து கீழே குதித்து மறைந்து விடுவது, ஒரு பெரிய ஹோலில் இருக்கும் 50 இற்கும் அதிகமானவர்களை மயக்கமடையவைத்து அந்தரத்தில் தொங்கவிடுவது, தலைகீழாக நிற்கவைப்பது ,குனிந்த மற்றும் நிமிர்ந்த நிலைகளில் அப்படியே இருக்கச் செய்வது போன்றவை இவரது ஸ்பெஷல். பொது இடத்தில் நடமாடும் ஒரு பெண்ணின் உடலின் பாதிப் பாகத்தைத் தன் கைகளாலேயே பிரித்து எடுத்து மறுபடியும் ஒட்டுவார்.

சமீபத்தில் அவர் செய்து காட்டிய மஜிக் பார்த்தவர்களை வாய் பிளக்கவைத்தது. ஒரு பெரிய பெட்டியில் கை விலங்கு மாட்டி உள்ளே உட்கார வைத்தனர். அந்தப் பெட்டியின் மீது சிமெண்ட் கலவைபோட்டு மற்றொரு பெட்டியில் போட்டு மூடினர். அந்தப் பெட்டியை ஒரு கிரேனின் உதவியுடன் அந்தரத்தில் தொங்கவிட்டனர்.


24 மணி நேரம் கழித்து பெட்டி தானாகக் கீழே விழும்படி செய்தனர். அந்த 24 மணி நேரமும் பெட்டியில் இருக்கும் கீரிஸ் ஏஞ்சல்ஸ் உயிரோடு இருப்பாரா அல்லது பெட்டி கீழே விழுந்தால் அவர் உயிருக்கு ஆபத்து ஏற்படுமே என்று பயந்தபடியே பார்த்துக் கொண்டு இருந்தனர்.

24 மணி நேரம் கழித்து பெட்டி தானாகத் தரையில் விழுந்து நொறுங்கியது. ஆனால் கிரீஸ் ஏஞ்சல்ஸ் வேறு இடத்தில் இருந்து எழுந்து வந்தார். பெட்டியை உடைத்துப்பார்த்தால் கைவிலங்கைத் தவிர உள்ளே ஒன்றும் இல்லை!




## கணக்கு குதிரை

மனிதர்கள் மட்டும்தான் மஜிக் செய்ய வேண்டும் என்பது விதியா? ஜேர்மனியைச் சேர்ந்த க்ளவர் ஹான்ஸ் என்கிற குதிரை அதிபுத்திசாலி என்று பெயர் பெற்றது. கணக்குக்குச் சரியாக விடை சொல்லும் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். இதை வைத்திருந்த வில்ஹெல்ம் வான் ஆஸ்டென் ஒரு மந்திரவாதி + கணித ஆசிரியர். இவர்தான் ஹான்ஸுக்கு கூட்டல் , கழித்தல், வகுத்தல், பெருக்கலோடு ஜேர்மன் மொழியையும் கற்றுக் கொடுத்தார்.



டூ ப்ளஸ் டூ என்று வில் ஹெல்ம் சொன்னால், நான்கு தடவை காலால் தரையை உதைக்கும் க்ளவர். 1909 இல் வில்ஹெல்ம் இறந்த பின்னர் ஹான்ஸ் காணாமல் போய்விட்டது.

அமெரிக்காவின் வெர்ஜினியா மாகாணத்தில் வசித்தது 'லேடி வொண்டர்' குதிரை. எதிர்காலத்தில் நடக்க இருப்பதைக் கணித்துச் சொன்னது அந்தக் குதிரை, காணா மல் போன ஒரு பெண், எண்ணெய்க் கிணறு இருக் கும் இடம் என்று லேடி வொண்டர் கண்டு பிடித்த விடயங்கள் நிறைய. ஆயிரக்கணக்கான மக்கள் இந்தக் குதிரையைத் தேடி கேள்விகளோடு காத்திருந்தார்கள். மக்களின் கேள்விகளுக்கு ஒரு மெகா சைஸ் டைப்ரைட்டரின் எழுத்துக்களைத் தட்டி பதில் சொன்னது இந்தக் குதிரை. 'ஒரு டொலருக்கு மூன்று கேள்விகள்' என்று இந்தக் குதிரையின் சொந்தக்காரர் வசூலித்துப் பணக்காரர் ஆனதில் எந்த மஜிக்கும் இல்லை!

## இரும்பைத் தங்கமாக்கு!

மஜிக் உலகம் இன்றும் தோற்றுக்கொண்டு இருக்கும் ஒரு விடயம். இரும்பைச் சில இரசாயனங்களின் மூலம் தங்கமாக மாற்றுவது!



16ஆம் நூற்றாண்டின் மத்தியில் பெர்சிய மற்றும் ஐரோப்பிய மந்திரவாதிகள் உலோகங்களைத் தங்கமாக மாற்றும்கரைசலையும், மரணம் தராத அமுதக் கரைசலையும் கண்டுபிடிக்க அரும்பாடுபட்டனர்.

1403 இல் நான்காம் ஹென்றி, போப் 22 ஆகியோர் இந்த ரசவாதக் கலைக்குத் தடை விதித்தார்கள். ஆனால் அதேசமயம் ரோம் நகரப் பேரரசர் இரண்டாம் ருடால்ஃப் இந்த முயற்சிக்கு அனுசரணையும் அளித்தார்.

உலோகங்களைத் தங்கமாக்க இரசாயனங்களின் கரைசல் மட்டும் இருந்தால் போதாது. கோள்களின் அமைப்பும் கலக்கப்படும் நேரம் சரியாக இருக்கவேண்டும் என்பது மந்திரவாதி களின் எண்ணம். ரசவாதத்தில் நான்கு நிலைகள் இருக்கின்றன. கருமைப்படுத்துதல், வெண்மைப்படுத்துதல், மஞ்சள்படுத்துதல் மற்றும் செம்மைப்படுத்துதல்.

கருமைப்படுத்தலில் இரசாயனக் கூறுகள் தனியாகப் பிரிக்கப்படும். பிரிக்கப்பட்டவை சுத்தப்படுத்தப்படும். பின் அது வெண்மைப்படுத்தப்படும். முறையான தேவதைகள் சரியான கோள் அமைப்பில் இருப்பதை மஞ்சள்படுத்துதல் என்றும் இவற்றை ஒருங்கிணைப்பதை செம்மைப்படுத்தல் என்றும் ரசவாத உலகம் அழைக்கின்றது.

இந்தியா, கிரேக்கம், சீனா, ஐரோப்பிய ரசவாதங்களில் மட்டும்தான் உலோகங்களைத் தங்கமாக்கும் சூத்திரங்கள் இருக்கின்றன. 400 ஆண்டுகளாகத் தொடரும் இந்த ஆராய்ச்சி முற்றுப் பெறவில்லை.

ஒருவேளை மந்திரவாதிகளின் ஆராய்ச்சி வெற்றிபெற்றால்...?

நீங்கள் அட்சய திருதியைக்கு அலைய வேண்டியது இல்லை.

## டானியல் பற பற!


பார்வையால் அல்லது ஆழ் மனதின் சக்தியால் ஒரு பொருளைத் தொடாமலேயே நகர்த்தும் சக்திக்கு சைக்கோகைனசிஸ் என்று பெயர். அதைப் பயன்படுத்தி 19 ஆம் நூற்றாண்டைக் கலக்கியவர் டானியல் டங்க்ளஸ் ஹ்யூம். 1833 பிறந்த டானியலுக்கு எட்வின் என்று ஒரு நண்பன் இருந்தான். 'நம் இருவரில் யார் முதலில் இறக்கிறோமோ அவர் மற்றவரின் கண்களுக்குத் தோன்ற வேண்டும்' என்று ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

சில வருடங்கள் கழித்து, டானியல் தன் கட்டில் அருகே ஏதோ ஒரு நிழல் மாதிரி எட்வின் நிற்பதைப் பார்த்தான். மறுநாள் எட்வின் விபத்தில் இறந்ததாகச் செய்தி வந்தது. அடுத்த நான்கு ஆண்டுகளில் டானியலுக்கு அதீதமான மஜிக் பவர் கிடைத்தது.

பார்வையாலே ஸ்பூனை நகர்த்தினான். திரைச்சீலையை இழுத்து மூடினான். அத்தை வாங்கி வைத்த பூக்களைக் காற்றில் மிதக்க வைத்தான். பயந்துபோன அத்தை டானியலை வீட்டைவிட்டே துரத்திவிட்டார்.

டானியலுக்கு இருக்கும் அமானுஷ்ய சக்தி பற்றிக் கேள்விப்பட்டு அவரைச் சோதிப்பதற்காக 1852 இல் மனோதத்துவ நிபுணர்கள் குழு ஒன்றுதேடி வந்தது. பேசிக்கொண்டு இருக்கும்போதே அலேக் காகக் கிளம்பி ஒரு ரவுண்டு அடித்துவிட்டுக் கீழே வந்தார்.

அத்தனை பேரும் அதிசயித்து விட்டார்கள். அவர் சாதனைகளைப் பார்த்து அதிசயித்த லார்ட் அடேர் என்ற ஒருவர் புத்தகம் எழுத, புகழின் உச்சிக்குப் பறக்காமலேயே சென்றார் டானியல்.



பகுத்தறிவாளர் டாக்டர் க்ருக்ஸ் என்பவர், விஞ்ஞானிகளின் பட்டாளத் துடன் டானியலைச் சோதித்தார். அவர்களோடு பேசிக்கொண்டு இருக்கும்போதே, மாடியில் ஒருஜன்னல் வழியே மிதந்து சென்று, இன்னொரு ஜன்னல்வழியே உள்ளே நுழைந்தார். அடுப்பில் இருந்த கங்குகளை எடுத்து முகம் துடைத்தார்.

தன் ஐந்துஅடி உயரத்தை ஆறரை அடியாக உயர்த்திக் காட்டினார்.

இது யாராலும் விளக்கமுடியாத சக்தி என்று ரிப்போர்ட் எழுதினார் டாக்டர் க்ருக்ஸ்.

1872 இல் மஜிக் சக்திகளிடம் இருந்து ரிட்டையர்ட் ஆகப் போவதாக அறிவித்தார் டானியல். சில ஆண்டுகளி லேயே அமைதியான முறையில் முடிந்து போனது டானியலின் வாழ்க்கை!.

# பாகிஸ்தான் லாகூரில் இரு மசூதிகளில் தீவிரவாதிகள் சுட்டதில் 80 பேர் பலி

(லாகூர்)

பாகிஸ்தானில் லாகூர் நகரில் உள்ள 2 மசூதிகளில் தீவிரவாதிகள் புகுந்து துப்பாக்கியால் சுட்டதில் 80 பேர் பலியானார்கள். மேலும் 100 பேர் காயம் அடைந்தனர்.

பாகிஸ்தானில் அவ்வப்போது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். நேற்று முன்தினம் லாகூர் நகரில் 2 மசூதிகளுக்குள்



தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தியதில் 80 பேர் பலியானார்கள். லாகூரில் மாடல் டவுண், கர்கிசாகு ஆகிய இடங்களில் உள்ள சிறுபான்மை அகமதி பிரிவினரின் மசூதிகளில் உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் மதியம் 1.45 மணி அளவில் வெள்ளிக் கிழமை தொழுகை நடந்து கொண்டு இருந்தது. அப்போது துப்பாக்கி மற்றும் வெடிகுண்டுகளுடன் திடீரென்று தீவிரவாதிகள் அந்த மசூதிகளுக்குள் புகுந்தனர். அவர்களில் சிலர் உடலில் வெடிகுண்டு மேலங்கிகளையும் அணிந்து இருந்தனர்.

உள்ளே நுழைந்த தீவிரவாதிகள் தொழுகை நடத்திக்கொண்டிருந்தவர்களை நோக்கி வெடிகுண்டுகளை வீசியபடி, துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டனர். இதனால் தொழுகையில் இருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்து எழுந்து பாதுகாப்புத் தேடி அங்கும், இங்குமாக ஓடினார்கள். சிலர் அங்குள்ள அறைகளுக்குள் சென்று பதுங்கினார்கள்.

இந்தத் தாக்குதல் பற்றிய தகவல் கிடைத்ததும் பொலிசாரும், துணை இராணுவப்படையினரும் 2 மசூதிகளுக்கும் சென்று சுற்றி வளைத்தனர். தீவிரவாதிகளின் பிடியில் பணயகைதிகளாக இருந்தவர்களை மீட்க பாதுகாப்பு படையினர் அதிரடித் தாக்குதல் நடத்தினார்கள். இதைத்தொடர்ந்து அவர்களுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே பயங்கர துப்பாக்கிச் சண்டை நடந்தது.

தீவிரவா திகள் நடத் திய இந்த கொடூர தாக்குதலில் 80 பேர் பலியானார்கள். மேலும் சுமார் 100 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மாடல் டவுண் மசூதி தாக்குதலில் உயிர் இழந்தவர்களில் பாகிஸ்தான் இராணுவ முன்னாள் லெப்டினன்ட் ஜெனரலும் ஒருவர் ஆவார். கர்கி சாகு மசூதியில் நடந்த தாக்குதல் பற்றி செய்தி சேகரிப்பதற்காக சென்ற தொலைக்காட்சி நிருபர் ஒருவர் குண்டுக் காயம் அடைந்து பின்னர் சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் உயிர் இழந்தார். இதில் சில பொலிசாரும் அடங்குவார்கள்.

தீவிரவாதிகளுடன் நடந்த துப்பாக்கி சண்டையில் சில பொலிசாரும் உயிர் இழந்தனர். மேலும் ஒரு பொலிஸ் சூப்பிரண்டு உட்பட 7 பொலிசார் காயம் அடைந்தனர்.

மாடல் டவுண் மசூதியில் தாக்குதல் நடத்திய 7 தீவிரவாதிகளில் 5 பேரை பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொன்றதாகவும் 2 பேர் காயத்துடன் பிடிபட்டதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கர்கி சாகு மசூதியில் நடந்த தாக்குதலில் மட்டும் 40 க்கும் அதிகமான பேர் உயிர் இழந்ததாக மீட்புக் குழுவின் செய்தித் தொடர்பாளர் பாகிம் ஜகன்ஜெப் கூறினார். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானின் தெரிக் - இ தலீபான் தீவிரவாத இயக்கம் பொறுப்பு ஏற்று உள்ளது. (6)

# பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம்

## சீனாவிடம் இந்திய ஜனாதிபதி கோரிக்கை

(பீஜிங்)

ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடாக இந்தியா இருப்பதற்கு ஆதரவளிக்க வேண்டும் என ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் சீனாவிடம் கோரியுள்ளார்.

சீனாவுக்கு ஆறு நாள் பயணம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் அந்நாட்டு பிரதமர் வென்ஜியாபாவை நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாக சீனா ஆதரவளிக்க வேண்டும் என அவர் அப்போது கோரினார். (6)

# நாம் தமிழர் மாநாட்டில் என்ன பேசினேன்? விளக்கமளிக்கத்தயார்

## பினாங்கு முதல்வர் தெரிவிப்பு

மதுரையில் நடந்த நாம் தமிழர் அரசியல் மாநாட்டில் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசிய பினாங்கு முதல்வர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறை மலேசிய அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

இதேவேளை இது தொடர்பில் அவர் இந்திய ஊடகம் ஒன்றுக்கு தெரிவிக்கும் போது, ஈழத்திற்காகவும் ஈழத்தமிழர்களுக்காகவும் நான் எப்போதும் எங்கேயும் குரல் கொடுப்பேன். அதனால் தான் ஈழத்தமிழர்களுக்கு குரல் கொடுக்கும் நாம் தமிழர் அரசியல் மாநாட்டில் கலந்து கொண்டு பேசினேன்.

இன்னும் ஒரு ஆண்டில் மலேசியாவில் தேர்தல் வரப்போகிறது. இத்தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றால் ஈழத்தமிழர்களுக்கு முழு அங்கீகாரம் அளிப்போம்.

ஈழத்தமிழர் விடயமாக நேற்று முன்தினம் கூட ஐ.நா அதிகாரிகளிடம் பேசினேன். மலேசிய உள்துறையிடமும் பேசினேன். இந்திய வெளியுறவுத்துறையின் கடிதம் பற்றி எதுவும் என்னிடம் தெரிவிக்கவில்லை.

இந்த விவகாரம் குறித்து என்னிடம் கேட்டால், நான் விளக்கமளிக்க தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்தார். (6)

# நேபாள பிரதமர் பதவி விலகுகிறார்

(காத்மண்டு)



மாவோயிஸ்ட்களின் தொடர் மிரட்டலுக்கு பணிந்து பிரதமர் பதவியில் இருந்து நேபாள பிரதமர் மாதவ்குமார் விலகுவதாக அறிவித்துள்ளார்.

நேபாளத்தில் கடந்த ஒரு ஆண்டாக பிரதமராக இருப்பவர் மாதவ் குமார். புதிய அரசமைப்பு சட்டத்தை நேற்றுமுன்தினம் ஏற்படுத்த மாவோயிஸ்டுகள் கெடு விதித்திருந்தனர்.

கெடு நெருங்கிய நிலையில் மாதவ் குமார் பதவி விலக மாவோயிஸ் ட் டுகள் வலியுறுத்தி வந்தனர். அதற்கு பணியும் வகையில் பதவியில் இருந்து 48 மணி நேரத்துக்குள் விலகப் போவதாக மாதவ் குமார் நேற்று முன்தினம் அறிவித்தார். (6)

# பிரிட்டனில் குடியேற புதிய அரசு கட்டுப்பாடு

(லண்டன்)

பிற நாடுகளிலிருந்து பிரிட்டனில் குடியேறுவோர் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த புதிதாக பொறுப்பேற்றுள்ள டேவிட் கமரூன் அரசு முடிவு செய்துள்ளது.

குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் அல்லாத பிற நாடுகளிலிருந்து அதாவது இந்தியா போன்ற நாடுகளிலிருந்து பிரிட்டன் குடியுரிமை கோருவோரைக் கட்டுப்படுத்த முடிவு செய்துள்ளது. இத் தகவலை குடியேற்றத்துறை அதிகாரி டேமியன் கிரீன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இத்தகைய முடிவை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

1990 ஆம் ஆண்டுகளில் கடைப்பிடிக்கப்பட்டதைப் போன்று கடுமையான கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் பிரிட்டனில் குடியேறுவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியும் என்று நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய மாணவர்கள், பணியாளர்கள், திருமணம் முடிந்து இங்கு குடியேறுவோர் என பல தரப்பினரையும் எவ்விதம் கட்டுப்படுத்தப் போகிறோம் என்பதை எதிர்வரும் வாரங்களில் பார்க்கலாம் என்றும் கூறினார். மேலும் அரசு கொண்டு வர உள்ள இத்தகைய கட்டுப்பாடுகள் நடைமுறை சாத்தியமில்லாதது. இதை எதிர்த்து நீதிமன்றம் செல்லப் போவதாக பிரிட்டனில் பணி புரியும் பிற நாட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (2-6)

# உரிய முறையில் பல் துலக்காதவர்களுக்கு இருதயநோய் ஏற்படக் கூடிய அபாயம்

## மருத்துவ ஆய்வில் தகவல்

உரிய முறையில் பல் துலக்காதவர்களுக்கு இருதய நோய் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக மருத்துவ ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் இரண்டு தடைவகளேனும் பல் துலக்காதவர்களுக்கு இருதய நோய்கள் ஏற்படலாம் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஸ்கொட்லாந்து ஆய்வாளர்களினால் 11 ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், இருதய நோய்களுக்கும் பற் சுத்தத்திற்கும் நேரடித் தொடர்பு உண்டா என்பதனை நிரூபிப்பதற்கு இன்னமும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டுமென மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பற்களை சுத்தமாக பேணுவதன் மூலமும் இருதய நோயைக் கட்டுப்படுத்த முடியும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறந்த உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு பற் சுத்தம் மிகவும் அவசியமானதெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இருதய நோய்களுக்கும், பற் சுத்தத்திற்கும் இடையிலான தொடர்பு குறித்த விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஜமெய்க்காவில் இடம்பெற்ற கலவரத்தில் 73 பேர் பலி

(கிங்ஸ்டன்)

மெய்கா நாட்டின் தலைநகர் கிங்ஸ்டனில், கிறிஸ்டோபர் துதுஸ் கோக் என்ற போதை மருந்து கடத்தல் கும்பல் தலைவன் பதுங்கி உள்ளான். அவனுக்கு உள்ளூர் மக்களின் ஆதரவும் இருக்கிறது. அவரைப் பிடிப்பதற் காக கடந்த ஞாயிற்றுக்கிழமை, பொலிஸார் மிகப் பெரிய தாக்குதலைத் தொடங்கினர்.

அப்போதிருந்து நடந்து வரும் சண்டையில் பலியானோர் எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளதாக நேற்று முன்தினம் பொலிஸார் தெரிவித்தனர். 73 பேரின் உடல்களும் கைப்பற்றப் பட்டன. இவர்கள் அனைவரும் பொதுமக்கள் ஆவர். இந்தச் சண்டையில் 3 பொலிஸாரும் பலியாகி உள்ளனர். 28 பேர் காயம் அடைந்தனர். இருப்பினும், கோக் இன்னும் பிடிபடவில்லை. (6)

# மலேஷியாவின் 40 கோடீஸ்வரர்கள் பட்டியலில் இரண்டு தமிழர்கள்

மலேஷியாவில் உள்ள 40 கோடீஸ்வரர்களின் பட்டியலில் இரண்டு தமிழர்களுக்கும் இடம் கிடைத்துள்ளது.

உலகின் உயர்ந்த கட்டிடங்களில் ஒன்றான மலேஷியாவின் பெட்ரொனஸ்டவரின் உரிமையாளரான 72 வயதான அனந்த கிருஷ்ணன் 40 ஆயிரம் கோடி மதிப்புள்ள சொத்துக்களின் அதிபதியாவார்.

மலேஷியாவின் மிகப்பிரபலமான கையடக்கத் தொலைபேசி இணைப்பு நிறுவன மொன்றை தற்போது இவர் நிர்வகித்து வரு கின்றார். அடுத்தவர் ஏ.கே.நாதன் என்பவரா வார். 54 வயதான இவர் உலோக மற்றும் கட்டிட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். (2-6)



ஜெர்மனியின் ராஸ்டிராப் மாகாணத்தில் ஏற்பட்ட கன மழையால், ஒடார் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஏராளமான விளைநிலங்களில் வெள்ள நீர் புகுந்தது.



வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெற்ற வடமாகாண தமிழ்த்தினப்போட்டி-2010 ஆரம்ப நிகழ்வில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா உரையாற்றுவதையும் மாணவிகள் இறைகீதம் இசைப்பதையும் மாணவி ஒருவர் போட்டிக்கு ஆயத்தமாவதையும் கலந்துகொண்டோரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## பொங்கல் விழா

(மருதங்கேணி)

மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

அன்று அம்மனுக்கு விசேட அபிஷேகங்கள் ,விசேட பூசைகள் நடைபெறவுள்ளது. அன்று காலை தொடக்கம் மாலை வரை காவடிகள்,கரகங்கள்,தூக்குக்காவடிகள் ஆலயத்தை நோக்கி வந்து அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களை செய்வார்கள். (6-35)

## சிவநெறி இறுவட்டு வெளியீட்டு விழா

(மருதங்கேணி)

கரவெட்டி பிரதேச செயலக சைவ ஆலோசனைச் சபையின் சிவநெறி இறுவட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் சி. சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வரவேற்புரையை கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் வி.க. சண்முகநாதன், வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (6-35)

## வடமராட்சி கல்வி வலய

# பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி முடிவுகள்

*நேற்றைய தொடர்ச்சி....*

**13 வயதுப் பிரிவு ஆண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

சி.வனஜன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்),சி.மதுசான்(தேவரையாளி இந்துக் கல்லூரி), செ.ஸ்ரீபன் ராஜ்( பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி)

**200 மீற்றர் ஓட்டம்**

சி.மதுசாந்(தேவரையாளி இந்துக்கல் லூரி), பொ. ராகுலன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்), ஜெ. ஜெயந்தன் (ஞானாசிரியார் கல்லூரி),

**நீளம் பாய்தல்**

செ.ஸ்ரீபன் ராஜ்( பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ஜே.இரகுகரன் (தொண்டைமானாறு வீரகத்தி, வி.நிதர்சன் ( யாக்காடு விநாயகர் வித்தியாலயம்),

**உயரம் பாய்தல்**

க.கயூபன்(தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலயம்)' சு.விதுயன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி) ந.ஜெயமதுஷன் (பருத்தித்துறை சித்தி விநாயகர்)

**15 வயது பிரிவு பெண்கள்**

**உயரம் பாய்தல்**

இ.ஜெனனி(மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) து.துசாந்திகா (சென்தோமஸ் றோ.க.த.க.பா) சி.தர்சினி(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**தட்டெறிதல்**

கு.நிரோசா( வட இந்து மகளிர் கல்லூரி), நி.நிசேதா( புற்றளை மகா வித்தியாலயம்), த.நிரோஜினி(வடமராட்சிமத்தியமகளிர்கல்லூரி)

**குண்டெறிதல்**

நி.நிசேதா(வட இந்து மகளிர் கல்லூரி), கு. நிரோசா(புற்றளை மகா வித்தியாலயம்), அ.பவித்திரா(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**ஈட்டி எறிதல்**

சு. நிரோஜினி( வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சி.மதுஷா(தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலயம்), ம.நித்திகா (பரு.மெதடிஸ்த பெண்கள் பாடசாலை)

**100 மீற்றர் ஓட்டம்**

சி.மலர்வாணி(வட இந்து மகளிர் கல்லூரி), த.சாளினி (தொண்டைமானாறு வீரகத்தி வித்தி , செ. நித்திலா(தேவரையாளி இந்துக்கல்லூரி)

**நீளம் பாய்தல்**

ச.சுகன்யா, வி.அஜந்தா(வட இந்து மகளிர் கல்லூரி), பா. மேகலா(வல்வை மகளிர் கல்லூரி)

**100 மீற்றர் தடை தாண்டல்**

ச.சுகன்யா (வட இந்து மகளிர் கல்லூரி), க.நிதர்சினி, சி.சுகன்ஜா(தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்).

**400 மீற்றர் தடைதாண்டல்**

க.அகல்யா(தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), இ. கார்த்திகா(வட இந்து மகளிர் கல்லூரி), சி.நிறஞ்சனா(வல்வை மகளிர் கல்லூரி)

**15 வயதுப் பிரிவு ஆண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

இ.பிரவிந்தன் (இமையாணன் அ.த.க.பா), க.தர்ஷன்(பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), சு.சங்கீர்த்தணன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை)

**200 மீற்றர் ஓட்டம்**

சி.திலக்ஷன்(உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை), இ.பிரவிந்தன் (இமையாணன் அ.த. க.பா),ம.மதுஷன்(புலோலி.மெ.மி.த.க.பா)

**400 மீற்றர் ஓட்டம்**

ம.மதுஷன்(புலோலி.மெ.மி.த.க.பா), பா.உமாசுதன்(பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ஞா.சாருஜன்( இமையாணன் அ.த.க.பா).

**நீளம் பாய்தல்**

சி.திலக்ஷன்(உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை), பா. உமாசுதன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), றோ. விதுர்ஷன் (கலட்டி றோ.க.த.பா)

**தட்டெறிதல்**

க.தர்ஷன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), க.நிதுஷன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), உ.திருக்குமரன் (சிதம்பராக்கல்லூரி)

**குண்டெறிதல்**

ஜெ. கட்சர் அனோசன்(பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ம.மதுஷன்(புலோலி .மெ. மி.த.க.பா), சோதிலக்ஷன்(நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) (6-24)

# யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்கும் அபாயம்

யாழ் . மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழைக்குப் பின் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் பரம்பல் பல இடங்களில் அதிகரித்து காணப் படுகின்றது.


கடந்த சில நாட்களாக யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் டெங்கு நோயுடன் சிலர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் எதிர்வரும் நாட்களில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. இதனால் பல உயிரிழப்புக்களும் ஏற்படலாம்.

எனவே உடனடியாக டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் முழு வீச்சில் முன்னெடுக்கப் படவேண்டும். இந் நோயை கட்டுப்படுத்த பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள் அரச சார்பற்ற நிறுவனங்கள்,பொது அமைப்புகள், பொது மக்கள் அனைவரதும் பங்களிப்பும்,பூரண ஒத்துழைப்பும் மிக அவசியம்.

**உடனடியாக நடைமுறைப்படுத்த வேண் டிய டெங்குத் தடுப்பு நடவடிக்கைகள்.**

1.சகல வைத்தியசாலைகளிலும் நுளம்பு பெருகும் இடங்கள் சுத்திகரிக்கப்பட வேண்டும். (பொறுப்பு-வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள்)

2. சகல திணைக்கள /நிறுவன வளவுகளில் சிரமதானம் மூலம் சுத்திகரிப்பு பணிகள் இடம் பெறவேண்டும். (பொறுப்பு-




திணைக்கள நிறுவன தலைவர்கள்)

3.பொது இடங்களில் நுளம்பு பெருகும் இடங்களையும் தண்ணீர் தேங்கிக் நிற்கும் இடங்களையும் துப்பரவு செய்யவேண்டும். (பொறுப்பு-உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள்)

4. திண்மக்கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படவேண்டும் (பொறுப்பு-உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள்)

5. பாடசாலைகளில் சிரமதான பணி மூலம் நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் அழிக்கப்படவேண்டும் .(பொறுப்பு-பாடசாலை அதிபர்கள்)

6.ஒவ்வொரு வீட்டிலும் நுளம்பு பெருக கூடிய கொள்லன்கள் அழிக்கப்பட்டு சுத்திகரிப்புப்பணி மேற்கொள்ளப்படவேண்டும் (பொறுப்பு- வீட்டு உரிமையாளர்கள் / குடியிருப்பாளர்கள்)

7.பராமரிப்பு இன்றி காணப்படும் காணிகள் உரிமையாளர்களால் அல்லது பராமரிப்பாளர்களால் துப்பரவு செய்யப்பட வேண்டும். (பொறுப்பு-உரிமையாளர்கள்/பராமரிப்பாளர்கள்)

டெங்கு நோய் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும். யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப் படுத்த அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்.

**வைத்திய கலாநிதி**
**ஆ.கேதீஸ்வரன் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

## திறந்த பாடசாலை கல்விச்செயற்பாடுகள் ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திறந்த பாடசாலை கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி,வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் மற்றும் மாகாண கல்விப்பணிப்பாளர்கள், செயலாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.இராசையா தெரிவித்துள்ளார். (6)

## திருப்பதிகங்கள் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்ற ஏற்பாட்டில் இன்று மாலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சுவாமி தேவஸ்தானத்தில் ஆலய பூசை யைத் தொடர்ந்து திருஞானசம்பந்த சுவாமி களுக்கு விசேட பூசை வழிபாடுகள், ஆரா தனை நடைபெற்று அவர் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள் முற்றோதல் நடைபெறும் என்று மேற்படி மன்ற அமைப்பாளர் சி.கிருஸ்ண மூர்த்தி தெரிவித்துள்ளார். (2)

> தீய செயல்கள் நம்மைத் துன்புறுத்துவது, அவற்றை செய்த காலத்தில் அன்று. வெகு காலம் சென்று அது ஞாபகத்திற்கு வரும்போது தான் .
> ~ரூஸோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தென்பகுதி சிங்கள மக்களே! என் எஜமானின் குடும்பம் எங்கே?

யாழ்.குடாநாடு, மக்கள் தொகையால் திணறுகிறது. வீதிகள், வெறும் வளவுகள், ஆலயங்கள், தேவாலயங்கள் எங்கும் தென்பகுதி மக்களின் கூட்டம்.

ஏன்தான் இப்படி? இனிமேல் யாழ்ப்பாணம் இப்படித்தான் இருக்குமா? நாங்கள் இழந்தவர்கள்; நொந்துபோனவர்கள் இப்போதெல்லாம் நாங்கள் காட்சிப் பொருட்கள். சிலருக்கு ஆய்வு கூடப் பொருட்களாகவும் தெரிகின்றோம்.

என் செய்வது! எல்லாம் எங்கள் தலைவிதி! ஒரு காலத்தில்... நாங்களும் தடிப்புள்ளவர்களாக இருந்தோம்... இப்படி எங்கள் பேரக் குழந்தைகளுக்குக் கதை கூறுவோமா? அல்லது இராமர் அயோத்திக்குப் போனதுபோல எங்களுக்கும் ஒரு கஷ்ட காலம்.

பதினான்கு வருடங்களுடன் இராமரின் வனவாசம் முடிந்தது போல எங்கள் கஷ்ட காலமும் முடிந்தது.

அந்தக் காலத்தில்... இப்படி எங்கள் பேரக் குழந்தைகள் கதைகேட்குமா? எதுவுமே தெரியாது.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. எங்களிடம் இருந்த கௌரவம், எங்கள் இனம் இருந்த சிறப்பு அனைத்தும் ஒரு கணத்தில் இப்படி கொட்டிச் சிதறிப்போகுமாக இருந்தால், இந்த நிலை எவருக்கும் ஏற்படலாம்.

வன்னி யுத்தத்திற்குப் பின்னர் இந்த உலகில் 'எதுவும் நடக்காது' என்ற ஒன்று இல்லை என்பதே ஈழத்தமிழர்கள் உள்ளத்தாலும் உணர்வாலும் உணர்ந்து கொண்ட உண்மை.

அதனால்தான் சொல்கிறோம். யாரும், எதையும் 'நிரந்தரம்' என்று நினைத்துவிடாதீர்கள்.

அந்த நினைப்பில் எதையும் எப்படியும் செய்யலாம் என்றும் எண்ணாதீர்கள்.

நீங்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகிறீர்கள் யாழ்ப்பாணத்தாரின் வளவில் ஆற அமர இருந்து உணவு உண்கிறீர்கள். சந்தோஷம். சூழ்நிலைக்கு ஏற்ப உங்கள் முடிபுகள் பிரமாதம்.

ஆனால் நீங்கள் குந்தியிருக்கும் அந்தக் காணியில் மேடாகக் காட்சி தருகிறதே ஒரு வீடு. அந்த வீடு யாருடையது. அந்த வீட்டில் இருந்தவர்கள் எங்கே?

இந்தக் கேள்விகளை தயவு செய்து ஒரு கணம் கேளுங்கள். அந்தக் கேள்விக்கு மேடாகிப் போன அந்த வீடு கதை சொல்லும்.

ஓ! புத்தபிரானின் அருமந்த மக்களே! என் எஜமானும் அவன் மனைவியும் குழந்தைகளும் 1995இல் என்னை விட்டு வன்னிக்குப் போனார்கள்.

அவர்கள் என்ன செய்ய முடியும். செல்வீச்சு, விமானக்குண்டு வீச்சு. இந்தக் கொடூரத்தால் வன்னிக்குச் சென்ற அவர்கள் இன்னமும் திரும்பி வரவில்லை.

ஏ-9 வீதியைப் பார்த்து என் கண்கள் பூத்து விட்டன.

தெரிந்த முகங்களிடம் என் எஜமானின் குடும்பம் பற்றிக் கேட்டேன். அவர்கள் குடும்பமாக இறந்து போனதாகச் சொல்கிறார்கள்.

கடவுளே! என் எஜமானின் குடும்பம் இல்லாமல் எனக்கொரு வாழ்வா? எனதருமை சிங்கள மக்களே! நீங்களாவது என் எஜமானையும் அவரின் அன்புத் துணைவியையும் என் பாசத்திற்குரிய குழந்தைகளையும் பார்த்தீர்களா?

அவர்களைப் பற்றிய நல்ல செய்தியுடன்தான் இங்கு வந்தீர்களா... என்ன எதுவும் பேசாமல் சுவைத்து ரசித்து சாப்பிடுகிறீர்கள்.

இப்படி அந்த வீடு கேட்கும்.

கேட்டுப் பாருங்கள். விசாரித்து அறியுங்கள். மெய்ப்பொருள் விளங்கும். அது உங்கள் இனத்தின் எதிர்காலத்திற்கு உதவும்.

## அமைச்சர் டக்ளஸின் வழிகாட்டலில் சிறு கைத்தொழில்கள் உள்ளூர் உற்பத்திகள் வளர்ச்சி காண்கின்றன

# வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரின் சிறந்த வழிகாட்டுதலின் கீழ் சிறு கைத்தொழில்கள் மற்றும் உள்ளூர் உற்பத்திகள் வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றன என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம் என்ற மகுடத்தில் யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற வடமாகாண உள்ளூர் உற்பத்திகள் கண்காட்சியும் விற்பனையும் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் சிறுகைத்தொழில் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியது. என்பதுடன் பொதுவாக வடகமாகாணத்தில் சிறப்பாக முன்னேறி வருகின்றதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிறந்த தலைமைத்துவமும் வழிகாட்டலும் அமைச்சர்களான டக்ளஸ், பசில் ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டல்களும் சிறுகைத்தொழில் மற்றும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கமென் மேலும் உந்து சக்தியாக இருக்கிறது.

பனை சார்ந்த அபிவிருத்தியும் அது சார்ந்த அபிவிருத்தி பணிகளும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கைத்தொழில் அபிவிருத்திக்காக 11 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இது வடமாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கும் மேலும் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.

இவ்வாறு கைத்தொழில் அபிவிருத்திகளை மேற்கொள்வதன் மூலம் வட பகுதி இளைஞர் யுவதிகளுக்கு அதிக வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க முடியும் என்றார். இந் நிகழ்வில் முன்னதாக சிறப்பு விருந்தினர்கள் மற்றும் விருந் தினர்கள் பிராதான வீதியிலிருந்து கலாசார பண்பாட்டுடன் மத்திய கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

அங்கு தேசியக் கொடியினை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவும் மாகாணக் கொடியினை ஆளுநரும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி தலைமையில் அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. அங்கு அமைச்சர் டக்ளஸ்தேவானந்த உரையாற்றும் போது கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை தவறவிடாது ஒவ்வொருவரும் தமக்காகவே சமுதாயத்திற்காகவும் உழைக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

முக்கியமாக உள்ளூர் உற்பத்திகளை பயன்படுத்தி அதன் மூலம் வளர்ச்சி காணவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். அதற்காக ஆளுநரும் எனது அமைச்சின் கீழும் நிச்சயமாக ஒத்துழைப்புக்களையும் ஆதரவையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வளமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்போம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2)

## யாழ்.-கதிர்காமம் பஸ் சேவை ஆரம்பம்

(கொழும்பு)

யாழ். குடாநாடு முதல் கதிர்காமம் வரையிலான பஸ் சேவையை முப்பது வருடங்களின் பின்னர் ஆரம்பிப்பதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜுலை முதலாம் வாரம் தொடக்கம் இந்த பஸ் சேவை இயங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

(ந-5)

## பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி யாழ்ப்பாணக் கிளையின் துணைக் காரியாலயம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் முழு உரித்துடைய பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி யாழ்ப்பாணக் கிளையின் துணைக் காரியாலயம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையிலும் காலை 10 மணிக்கு பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையிலும் காலை 11.30 மணிக்கு சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையிலும் பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் பிரதம நிறைவேற்றுதிகாரி யு.பி.குமாரகேயினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதான நிறைவேற்று அதிகாரியுடன் பிரதான முகாமையாளர் டமித்தும் வருகை தரவுள்ளதாக மக்கள் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா தெரிவித்தார். (6)

## காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட கொத்தணிகளுக்கான கலந்துரையாடல்கள்


(யாழ்ப்பாணம்)

வடக்கு -கிழக்கு உள்ளூர் சேவை மேம்பாட்டு செயற்றிட்ட நாலாண்டு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (நெல்சிப்) முன்னெடுப்பதற்குரிய அபிவிருத்தி திட்டங்களை பொதுமக்கள் இனம் காண்பதற்கும் முன்னுரிமைப் பட்டியலைத் தயாரிப்பதற்கும் வசதிசெய்யும் கலந்துரையாடல்கள் காரைநகர் பிரதேச சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இதில் காரை .தெற்கு கொத்தணிக்குட்பட்ட J/42, J/43,J/44, J/45கிராமஅலுவலர் பிரிவிலுள்ளவர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு காரைநகர் களபூமி திக்கரை இந்து இளைஞர் மன்றக் கட்டடத்திலும் காரை. வடக்கு கொத்தணிக்குட்பட்ட J/40,J/41,J/46,J/47,J/48 கிராம அலுவலர் பிரிவிலுள்ளவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலடி கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் நடைபெறவுள்ளது.

தமக்குரிய கொத்தணிகளிற்கான கலந்துரையாடல்களில் அவ்வப்பகுதி மக்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச சபை செயலாளர் இரா. லோகநாதன் கேட்டுள்ளார். (6)

# தந்தை-மகன்- தூய ஆவி



இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகின்றவன் அறத்தின் இயல்பை உடைய மூவர்க்கும் நல்வழியில் நிலைபெற்ற துணையாவான்.

ஆம், மண்ணில் பிறந்த ஒவ்வொருவனும் தனியாக அல்ல; குழுவாக, குடும்பமாக வாழப் பிறந்தவன். காரணம், படைப்பின் நியதியே இது தான். அதைத்தான் தொடக்க நூலில் படிக்கின்றோம். கடவுள் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்.

கணவனும் மனைவியும் அன்பு செய்து அந்த அன்பின் கனியாக குழந்தைகளைப் பெற்று அமைக்கின்ற நிலைதான் குடும்பம் எனவே இந்தக் குடும்ப வாழ்வில் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்கின்ற விட்டுக் கொடுக்கின்ற ஏற்றுக்கொள்கின்ற மனம் இவைகளை கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும்.அப்போதுதான் அக்குடும்பத்தில் அன்பும் அமைதியும் மகிழ்ச்சியும், புரிதலும் பணியும் குடிகொள்ளும். இப்படி இருக்கின்றபோது அது தமதிருத்துவ உறவாக மலர்கின்றது.

ஒற்றுமை என்று சொல்லுகின்றபோது மூவருக்குள்ளும் சரியான புரிதல் உண்டு.இதைத்தான் இயேசு அடிக்கடி கூறுவார். நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கின்றோம் தந்தை என்னை அறிந்திருக்கிறார்; நானும் தந்தையை அறிந்திருக்கிறேன் உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன் அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார்.

இவர்கள் மூவருக்கும் தனித்தனியான பணிகளும் கொடைகளும் உண்டு தந்தையாகிய இறைவன் இப்பூவுலகையும் அதில் வாழ்உயிரினங்களையும் படைத்து மனிதனுக்கு படைக்கும் திறனையும் கொடையாகக் கொடுத்திருக்கிறார். கடவுள் ஆணும்பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.... அவர்களுக்கு ஆசி வழங்கி பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்..... உயிர் வாழ்வின் அனைத்தையும் ஆளுங்கள் என்றார்.

### பரமபிதா காட்டிய பாதை

தூய ஆவியாகி இறைவன் இயேசுவின் பரிந்து பேசுவதலால் தந்தையினால் உலகிற்கு அனுப்பப்பட்டு நம்மை உண்மையின் வழியில் வழி நடத்திக் கொண்டிருக்கிறார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார். தாம் கேட்பதையே பேசுவார்... அவர் என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார். இவ்வாறு மூவொரு கடவுள் தங்களுக்குள் ஆள் தன்மையில் வேறுபட்டிருந்தாலும் உறவு பணிபுரிதல் இவைகளில் ஒன்றுபட்டிருக்கின்றார்.

இவர்களின் விழாவைத்தான் இன்று நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

ஆம் நாம் அனைவரும் மூவொரு கடவுளின் பிள்ளைகள் மூவொரு கடவுள் தமக்குள் உறவோடும் ஒற்றுமையோடும் அன்போடும் வாழ்வதைப்போல் நாமும் வாழ்வோம் தமத்திருந்துவதை நம்மிலே காண்போம்.

ஜோன் ரொபேர்ட்

Air Bike

OVER 50 YEARS SERVICE STILL IN LEAD

CENTRAL CYCLE STORES

11 YEARS WARRANTY



காலங்கள் போனாலும் எமது தரமான உற்பத்தி மாறவில்லை. மற்றவர்களைப் போல் நாம் போலியானவற்றை வழங்கமாட்டோம். நவீன யுகத்தில் திறமையான தொழில் நுட்பங்களைக் கொண்டு உறுதியான சைக்கிள்களை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றோம்.

50வருட சேவையில் உங்களுடன்

AIR BIKE
ATARI — BICYCLES
KAMIKAZI

SPARE PARTS AVILABLE ISLANDWIDE

CENTRAL CYCLE STORES
IMPORTERS & DISTRIBUTORS OF ALL MODELS OF BICYCLES & SPARES

#93, DAM STREET COLOMBO.12
SRI LANKA
TEL-(0094 11) 2338220, 2432183
2441597
FAX-(0094 11) 2338626
E-MAIL-cycle_20000@yahoo.com



குறைந்த எடையிலான வர்ண சீமெந்து கூரை ஓடுகள்
முதன் முறையாக நம் இலங்கைத் திருநாட்டில்...
நீண்ட கால பாவனை நிகழ்கால நாகரிகம்...
நிறைவான வடிவமைப்பு...

DESIGNER ROOFS

கூரை ஓடுகள்...

உங்களுக்குத் தேவையான வர்ணங்களில்...




அதி உயர் தொழில்நுட்பம்! குறைந்த எடை!
வர்ண சீமெந்து ஓடுகள்100 சதுர அடிக்கு 78 ஓடுகள் மட்டுமே.
ஒரு சதுர அடிக்கான விலை ரூபா 74/- மட்டுமே.
(அனைத்து வரிகளும் உட்பட) தேவையான வர்ணங்களில்.
அதி கூடிய பலம் வாய்ந்ததென்பதால் கூரையில் பொருத்தும் போது உடைவுகள் ஏற்படாது.
இலவச தொழில் நுட்ப உதவி.
25 வருட உத்தரவாதம்.

கஜமுகன் ஹாட்வெயர்

147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 021 222 2833

www.srilankainsurance.com



ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

யசஸ்

மொத்த பெறுமதி · வரப்பிரசாதம் · பாதுகாப்பு

உங்களது முதிர்வுற்ற ஆயுள் காப்புறுதிக்கு சிறந்ததோர் முதலீடு

இப்பொழுது உங்களது முதிர்வுற்ற ஆயுள் காப்புறுதிக்கு சிறந்ததோர் முதலீட்டையும் மூன்று அனுகூலங்களையும் பெற்றுத் தரும் தனித் தவணையை மட்டும் கொண்ட ஆயுள் காப்புறுதியே ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் வழங்கும் யசஸ்.

**மொத்த பெறுமதி**
நீங்கள் முதலீடு செய்யும் தொகை

**வரப்பிரசாதம்**
உங்களது முதலீட்டுத் தொகைக்கான கவர்ச்சிமிகு அனுகூலங்கள்

**பாதுகாப்பு**
பணத்தை வைப்பு செய்யும் காலத்தில் உங்களுக்குக் கிட்டும் ஆயுள் காப்புறுதி*

நீங்களும் இப்பொழுதே ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் யசஸ் ஆயுள் காப்புறுதியில் முதலீடு செய்து, இம் மூன்று அனுகூலங்களையும் அனுபவித்து மகிழுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் கிளையை அல்லது அதன் ஆலோசகரை அல்லது 2 357 357 எனும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

*நியந்தனைகளுக்குட்பட்டது.

TRIAD

## உதைபந்தாட்டம் மூலம் ஐக்கியப்படுவோம்

# மன்னார் சென் சேவியர் சம்பியன்; மானிப்பாய் இந்துக்கல்லூரி 2ஆம் இடம்

வெற்றிபெற்ற மன்னார் சென்சேவியர் அணித்தலைவரிடம் வெற்றிக்கிண்ணம் வழங்கும்போது...



மன்னார் சென் சேவியர்



மானிப்பாய் இந்துக்கல்லூரி



(யாழ்ப்பாணம்)

'உதைபந்தாட்டத்தின் மூலம் ஐக்கியப்படுவோம்' என்ற பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரில் மன்னார் சென். சேவியர் கல்லூரி அணி சம்பியனானது.

சென் ஜோன்ஸ் கல்லூரியின் விளையாட்டுப்பிரிவு வடக்கு, கிழக்கு, தெற்கு மாகாணங்களில் அழைக்கப்பட்ட 13 பாடசாலைகளின் உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளை கடந்த 3 நாட்களாக நடத்தி வந்தது.

மேற்படி போட்டிகள் சென் ஜோன்ஸ், சென் பற்றிக்ஸ், சென் அன்ரனீஸ் ஆகிய கல்லூரிகளின் மைதானங்களில் நடைபெற்று வந்தன. அரையிறுதிப் போட்டிகள் நேற்றுக் காலையும் இறுதிப் போட்டி மற்றும் மூன்றாம் ஆட்டத்திற்கான போட்டிகள் நேற்று பிற்பகலிலும் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

அரையிறுதி ஆட்டங்களில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, புத்தளம் சகீரா கல்லூரியை 2-0 என்ற கோல் அடிப்படையிலும் மன்னார் சென்சேவியர் கல்லூரி மட்டக்களப்பு அல்ஜீராக் கல்லூரியை 2-1 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு நுழைந்தன.

தொடர்ந்து இறுதி ஆட்டம் நடைபெற்றது. இறுதி ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் மன்னார் சென்சேவியர் கல்லூரியும் கடுமையாக மோதின. இதனால் முதல் பாதி ஆட்டம் கோல் எதுவும் அடிக்காத நிலையில் முடிபுற்றது.

தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்தில் சென் சேவியர் கல்லூரி அணி ஆட்டத்தில் பலம் காட்டியது. இரண்டாவது பாதி ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தின் சென்சேவியர் வீரர் ஏ.அனோஸன் முதல் கோலினைப் போட்டார்.

தொடர்ந்து சிறப்பாக விளையாடிய சென் சேவியர் அணி அனோஸனினால் மேலும் ஒரு கோலினைப் பெற்றது. பதில் கோல் அடிக்கும் முனைப்பில் ஈடுபட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியின் முயற்சி பயனளிக்கவில்லை. இறுதியில் மன்னார் சென் சேவியர் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனானது.

மூன்றாம் இடத்தினை மட்டக்களப்பு அல்ஜீராக் கல்லூரி பெற்றுக்கொண்டது. இதனை விட காட்சிப் போட்டியாக குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலய பெண்கள் அணிக்கும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பெண்கள் அணிக்குமிடையில் நடைபெற்றது. இதில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றிபெற்றது.

இறுதிப் போட்டியின் நாயகனாக மன்னார் சென் சேவியர் கல்லூரியைச் சேர்ந்த லனேந்தாவும், சிறந்த கோல் காப்பாளராக மானிப்பாய் இந்துக்கல்லூரியின் துசேந்திரனும் தெரிவாகினர்.

## தென்னாபிரிக்கா தொடரை தனதாக்கியது

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஐந்து போட்டிகளைக்கொண்ட சர்வதேச ஒருநாள் போட்டித்தொடரை 3-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா அணி தனதாக்கியது. மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக நடைபெற்ற மூன்றாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் 67 ஓட்டங்களினால் தென்னாபிரிக்கா வெற்றியீட்டியது.


இப் போட்டி மேற்கிந்தியத்தீவுகளின் டொமினிக்காவில் உள்ள வின்ட்சோர் பார்க் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 47.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் ஏ.பி.டி.வில்லியர்ஸ் 70 ஓட்டங்களையும் ஹசிம் அம்லா 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பதிலுக்குதுடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 38 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களை மட்டுமே பெற்று 67 ஓட்டங்களால் தோல்வியடைந் தது. இதில் ரிச்சாட்ஸ் 28 ஓட்டங்களையும் சந்தர்ப்போல் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இவ் வெற்றியின் மூலம் முதல் மூன்று ஒருநாள் போட்டிகளிலும் வெற்றிபெற்று தென்னாபிரிக்க அணி தொடரை 3-0 என்ற கணக்கில் தனதாக்கியது.




# மேற்கு ஜேர்மனி அபாரம்





சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்தமையை முன்னிட்டு அதன் தலைமையிடமான சுவிட்சர்லாந்தில் ஐந்தாவது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி கடந்த 1954ஆம் ஆண்டு ஜுன் 16ஆம் திகதி முதல் ஜுலை 4ஆம் திகதி வரை ஐந்தாவது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடர் நடைபெற்றது.

இதில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்றன. ஆசிய அணிகளில் கொரியாவுக்கு வாய்ப்புக் கிடைத்தது. அத்துடன் இத் தொடரில் தான் முதன் முறையாக போட்டிகள் தொலைக் காட்சி மூலம் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

இத் தொடரில் லீக் சுற்றுப் போட்டிகள் ரவுண்ட் றொபின் முறையில் நடத்தப்பட்டன காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நொக் அவுட் முறையில் நடைபெற்றன. லீக் சுற்றில் 4 பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டன.

### இத்தாலி அதிர்ச்சி

லீக் சுற்றின் முடிபில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப்பெற்ற பிரேஸில், யுகோஸ் லாவியா, ஹங்கேரி, மேற்கு ஜேர்மனி, உருகுவே, ஆஸ்திரியா, இங்கிலாந்து மற்றும் சுவிட்சர்லாந்து அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றன.

அதிகம் எதிர்பார்க்கப்பட்ட பிரான்ஸ், இத்தாலி அணிகள் லீக் சுற்றுடன் வெளியேறி பெரும் ஏமாற்றம் அளித்தன.

காலிறுதிப்போட்டிகளின் முடிபில் ஹங்கேரி, உருகுவே, மேற்கு ஜேர்மனி, ஆஸ்திரியா அணிகள் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறின.

இதில் ஹங்கேரி (4-2), உருகுவே அணியையும் மேற்கு ஜேர்மனி (6-1), ஆஸ்திரியாவையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தன.

### பரபரப்பான மோதல்

பரபரப்பாக நடந்த இறுதிப் போட்டியில் ஹங்கேரி, மேற்கு ஜேர்மனி அணிகள் கோப்பையை வெல்வதற்கு போராடின. ஆட்ட நேர முடிபில் இரு அணிகளும் தலா 2 கோல்கள் அடித்தன.

பின்னர் கூடுதல் நேரத்தில் மேற்கு ஜேர்மனியின் ரான், ஒரு கோல் அடித்து அசத்தினார். இதன் மூலம் மேற்கு ஜேர்மனி 3-2 என்ற கோல்கணக்கில் ஹங்கேரியை வீழ்த்தி முதன் முறையாக சம்பியனானது. இரண்டாம் இடத்தை ஹங்கேரி அணி பெற்றது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில் ஆஸ்திரியா (3-1) உருகுவே அணியை வீழ்த்தியது.

ஹங்கேரி அணியின் சண்டோல் காக்கீஸ் தொடரில் 11 கோல்கள் அடித்து தங்கப் பாதணி (கோல்டன் ஷூ) விருதை தனதாக்கினார்.

### துளிகள்

ஐந்தாவது உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் ஒவ்வொரு அணியும் கோல் மழை பொழிந்தன.

மொத்தம் நடந்த 26 போட்டிகளில் 140 கோல்கள் அடிக்கப்பட்டன. அதிக பட்ச மாக 5 போட்டிகளில் 27 கோல்கள் அடித்து அசத்தியது ஹங்கேரி அணி

இது தவிர ஒரே ஆட்டத்தில் அதிக கோல்கள் அடிக்கப்பட்டதும் இத் தொடரில்தான். ஆஸ்திரியா (7), சுவிட்ஸர்லாந்து (5) அணிகளால் காலிறுதிப் போட்டியில் மொத்தம் 12 கோல்கள் அடிக்கப்பட்டன.

# தனித்திருந்த பெண் கொலை; நகைகள் கொள்ளையடிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் வீட்டிலிருந்தவரை கழுத்து நெரித்துக் கொலை செய்துவிட்டு நகைகளை கொள்ளையடிக்கப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் கட்டைவேலி கரவெட்டியைச் சேர்ந்த ஜெயபாலா விஜயலட்சுமி (வயது 54) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

பிரஸ்தாப பெண் வீட்டில் இருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவர் மூதாட்டியை கொலை செய்துவிட்டு நகைகளை கொள்ளையடித்துச் சென்றதாக கூறப்படுகிறது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா விசாரணைகளை மேற்கொண்டார். வடமராட்சியில் ஒரு மாத காலத்திற்குள் இடம்பெற்ற மூன்றாவது கொலைச் சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ந-24,3)

## சரணடைந்த...

விட்டதாகவும் ஏனையோர் இரு வரிடமும் (மகிந்த மற்றும் கோத்தபாய) இது தொடர்பில் கருத்தைக் கேட்டறியும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்ற செய்தியை நீங்கள் வெளியிடலாம். என்றும் ஹோகன்ன தெரிவித்தார் என இன்னர் சிற்றிப் பிரஸ் தெரிவித்துள்ளது.

சரணடைந்த புலிகளின் தலைவர்கள் கொல்லப்பட மாட்டார்கள் என்று தன்னிடம் உறுதியளித்ததாக விஜய் நம்பியார் தெரிவித்த ஏனைய இருவரான ஜனாதிபதி மகிந்தவிடமும் கோத்தபாயவிடமும் கருத்தைக் கேட்டறியும் வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால் அரசின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் நியூயோர்க் சென்றிருந்த சமயம் அவரிடம் இது குறித்து கேட்டறிவதற்கு முற்பட்டபோது-பீரிஸை இன்னர் சிற்றி பிரஸ் செய்தி நிறுவனம் சந்திப்பதற்கு ஹோகன்ன அனுமதிகவில்லை என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தேசிய ஊடக கழகத்திற்குச் சென்ற வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், அங்கு ஊடகவியலாளர்களைச் சந்திக்காமல் வெளிநடப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

வாஷிங்டனில் அமைந்துள்ள தேசிய ஊடகக் கழகம் 2009 ஆம் சுதந்திர ஊடகவியலாளருக்கான தனது விருதினைப் படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் ஆசிரியர் லசந்தவுக்கு வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தேவா-வரதன் நினைவு நிகழ்வு

ஊடகவியலாளர் பரநிருபசிங்கம் தேவகுமார் மற்றும் மகேந்திரன் வரதன் ஆகியோரின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இன்று மூளாய் வீதி ஸ்ரீ கணேசா வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இளைஞர் உடல் உள விருத்திச் சங்கத்தின் தலைவர் இரா.தயாபரன் தலைமையில் நடைபெறும் இந் நினைவு நாள் நிகழ்வில்,

ஞாபகார்த்த உரைகளும் மாறிவரும் சமுதாய வளர்ச்சியில் இன்றைய ஊடகங்களின் பங்களிப்பு என்ற பொருளில் நினைவுப் பேருரையும் மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும். (ந-5)

## ஐ.தே.க...

வளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுமே தலைமைத் பதவியைக் கைப்பற்றும் நோக்கில் ஊடகப் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## நாம்...

பிமானப் பிரச்சினைகள் தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் இணக்கமின்றி முடிபடைந்ததாகவும் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள வட மாகாணச் சபைத் தேர்தலை எதிர்கொள்ளத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாராக இருக்கின்றதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள இரா.சம்பந்தன், வட மாகாண சபையின் அதிகாரத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்க வேண்டிய தன் முக்கியத்துவம் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொடியின் கீழ் இணையவிரும்பும் எந்தவொரு தமிழ்க் குழுவுடனும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவிருப்பதாகத் தெரிவித்துள்ள சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகிய சிவாஜிலிங்கம், சிறிகாந்தா போன்றவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த எண்ணியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## கிளி.மக்களின் கருத்தறிந்த பின்பே...

மைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா,

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி சு.பரமராஜா, யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன், தேசிய நீர் வழங்கல் அதிகார சபை நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**பூநகரி மக்களின்நீர்ப்பிரச்சினை தீர்த்தல்**

இக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மக்களுக்கான நீர் விநியோகத் திட்டம் சீர்செய்யப்பட வேண்டும். குறிப்பாக பூநகரிக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே பூநகரி மக்களின் சார்பில் நான் கேட்டுக் கொள்வது இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்.மாவட்டத்திற்கான நீர்விநியோகம் செய்யப்படுவது அவசியம். அதேபோன்று பூநகரிக்கான நீர்விநியோகத் திட்டத்தையும் அமுல்படுத்த வேண்டும்.

எங்களது குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கும் வரைக்கும் யாழ்.குடாநாட்டிற்கு இரணைமடுக் குளத்திலிருந்து குடிநீர் விநியோகிக்க முடியாது என்று பூநகரி மக்கள் கேட்டுள்ளார்கள். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

**திட்டத்தை இரண்டு வருடங்கள் ஒத்திவைப்போம்**

கூட்டத்தில் அடுத்துக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், இரணைமடுக் குளத்திலுள்ள நீர் கிளிநொச்சி மாவட்ட மக்களின்தேவையைப்பூர்த்திசெய்யவேண்டும்.

அதேநேரம் யாழ்.மாவட்டத்திற்கு விநியோகிப்பதற்கும் அம் மக்களுக்கு ஆட்சேபனை கிடையாது. எனினும் தற்போது கிளிநொச்சி கமக்கார அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்தாது யாழ்ப்பாணத்தில் கருத்துக்கள் பெறப்படுவது பலவிதமான எண்ணங்களை ஏற்படுத்தும்.

இன்றைய சூழ்நிலையில் எம் மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து, பலவற்றையிழந்து நிர்க்கதியாகியுள்ளனர். எனவே கிளிநொச்சி மக்கள் சுமுகமான வாழ்க்கைக்குத் திரும்பிய பின்னர் இரணைமடுவில் இருந்து யாழ்.மாவட்டத்திற்கான நீர்விநியோகத் திட்டத்தை ஆரம்பிப்பது நல்லது. அதற்காக இத் திட்டத்தை இரண்டு வருடங்கள் ஒத்தி வைக்க வேண்டும்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் நீர் விநியோகத் திட்டம் அமுல்படுத்தப்படும்போது கரையோரங்கள், தீவகத்தின் நீர்விநியோகங்களை மேம்படுத்த வேண்டும்.

அப் பகுதிகளில்தான் மக்கள் குடிநீர்ப் பிரச்சினைக்கு பெரிதும் முகம்கொடுக்கின்றனர். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் பேராசிரியர்கள், வைத்திய கலாநிதிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களின் கருத்துக்களையடுத்து தொகுப்புரையாற்றிய பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

கிளிநொச்சி மக்களின் நீர்விநியோகம் முழுமையாக்கப்படாமல் இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்.மாவட்டத்திற்கான நீர்விநியோகத் திட்டம் அமுல்படுத்துவதற்கு இடமளிப்பதில்லை என்பதில் உறுதியாகவுள்ளோம்.

அத்துடன் கிளிநொச்சி மக்களிடமும் இது தொடர்பான முழுமையான கருத்துக்கள் கேட்டறியப்படும். இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் உள்வாங்கப்படும். கிளிநொச்சி மக்களுடன் இணைந்து மற் றொரு கூட்டத்தை ஏற்பாடு செய்து இது தொடர்பில் ஆராய்வோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ந-5)

## மலகூடக்...

வழங்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் இன்று மேற்கொள்வர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## இலங்கையில் போர்க் குற்றங்கள்...

உறுப்பினர்கள் தெரிவின் பின்னர் நிபுணர்கள் குழு பற்றிய தகவல்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மனித உரிமை மீறப்பட்டதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்திவரும் ஐ.நா. சபை சர்வதேச தரத்திற்கு அமைவாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் கூறி வருகின்றது.

குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு ஏற்கனவே வாக்குறுதியளித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மக்களைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முயற்சி மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படும் அதேநேரம் துரதிர்ஷ்டவசமாக கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கப்படவில்லை எனவும் இதனால் பாரியளவு உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். எனினும் இந்த நிபுணர்கள் குழு தெரி வுக்கு இலங்கை அரசாங்கம் ஆரம்பம் முத லே கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றது. (ந-5)

## மரண அறிவித்தல்

### திருமதி தையலாம்பாள் சுந்தரமூர்த்தி (அம்பிகா)



வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பரம்பரை தர்மகர்த்தாவும் உரிமையாளருமாகிய அமரர் கந்தப்பச் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார்-அமரர் கண்ணம்மாளாச்சி ஆகியோரின் அருமைப் புதல்வியும்,

அமரர் சீனிவாசபிள்ளை-அமரர் செங்கம்மாளாட்சி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பேராசிரியர் சுந்தரமூர்த்தியின் (மதுரை) அருமை மனைவியுமாகிய தையலாம்பாள் (அம்பிகா) 25.05.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அனுசியா, கண்ணன் (முன்னாள் விரிவுரையாளர், கணனி விஞ்ஞானத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தாயும், வைத்திலிங்கம் செட்டியார் (பரம்பரை தர்மகர்த்தா, வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் , பொறியியலாளர்-யூரோவில்), தயாமதி ஆகியோரின் அன்பு மாமியும் கந்தப்பா (பாபு), மதுரா ஆகியோரின் அன்புப் பாட்டியும்

அமரர்களான கந்தப்பச் செட்டியார், முத்துக்காயரோகணம் செட்டியார், ஜெகதாம்பாள் மற்றும் மங்களாம்பாள் (இந்தியா), சுந்தரலிங்கம் செட்டியார் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற சரோஜா ஆச்சி(கஸ்தூரி), சக்குபாய் (இந்தியா), இராஜேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்றவர்களான சுவாமிநாதபிள்ளை, சீனுவாசபிள்ளை, சண்முகசுந்தரம்பிள்ளை, நடராஜபிள்ளை, பேராசிரியர் ராஜகோபாலன், கனகாம்பாள் மற்றும் சொக்கலிங்கம் (இளைப்பாறிய நீதிபதி, வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கந்தப்பச்செட்டியார் வைத்திலிங்கம் செட்டியார்,
கந்தப்பச்செட்டியார் ரமேஷ்.
(வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்)
மருமக்கள்

160, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
021 2223264

(1600)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.